ஸ்ரீ

இராமஜெயம்.

ஸ்ரீமகாபாகவதத்தில்

எட்டாவது ஸ்காந்தச்சம்பிரதாயமாகிய

# குசேலமகாமுநிவர்

## சரித்திரக்கீர்த்தனை.

இஃது

குற்றம்பாக்கம்

**இரத்தினப்பிள்ளையவர்கள்**

பாடித்தருகவென

ஷை ஊர்

**இலக்குமிபதிதாசர்**

அவர்களாலியற்றப்பட்டு.

வேலூர்

மார்க்கசகாயபிள்ளை

குமாரர்

**சபாபதிபிள்ளை**

அவர்களால்

**பு-ம.சபாபதிமுதலியாரது**

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

உருத்திரோத்காரி௵ மாசி௴.

COPY-RIGHT.

ஸ்ரீ

இராமஜெயம்.

# சாற்றுகவி.

திரிசிரபுரத்துக்கடுத்த-உறையூர்

மகாகனம்பொருந்திய-ஈ-ஈ-ஸ்ரீ.முத்துவீருபாத்தியாயர்

மாணுக்கர்களிலொருவராகிய

சுக்கிரவார சநிவாரங்களில் சுப்பிரமணியர்- நரசிங்கர்துதிக்கும்

## விஜயரங்கதாசர்

இயற்றியது.

பன்னிருசீர்-இரட்டையாசிரியவிருத்தம்;

சீர்பெருகுமானிடந்தன்னிலந்தணர்குல ... *
சிலாக்கியகுசேலமுநிவன் ... ... *
திருவின்மிகுகற்புடையமனைவியிருவரும்வறுமை *
தீரவெண்ணித்திருநிறச் ... ... ...*
செகதீசனைக்காணுமன்பொடவல்காணிக்கை ......*
சேர்த்திடக்கைக்கொண்டுழல் ... ... *
செநநமரணத்தொடிம் மையின்வறுமையைப்போக்கி
செயசுபம்பெருகிவாழ்ந்த... ... ... *
ஏர்பெருகுகாதைநாடகமாலினடிதுதித் ... *
தேர்க்குபத்தர்க்குவந்தி ... ... ... *
ஈய்கவென்றருள்சுரந்தின்பமொடிலக்மிபதி ... ...*
யேமானிடத்தேகமுற் ... ... *
றெங்கணும்புகழன்பர்கற்கண்டுசீநிதே ... *
னிதுசதாநந்தவமிர்தம் ... ... *
என்றுபருகிடவளித்ததைமதுராபுதுவைசென் ...*
னைச்சங்கமெழிற்புலமையாற் ... ... *

பார்பெருகுமகிழ்மேற்றுவரனடித்துதியுற்ற ... *
பாவலன்னங்களத்தூர்ப் ... ... *
பாக்கியமுயர்வேதகிரி பூபனுற்செய்தவப் ... ... *
பலமாறுமுகமகிபனற் ... ... *
படியினிற்மேருன்றுதிகமெழய்தலாலொருவாறு... ... *
பார்த்துமாதுலனுகியப் ... ... *
பங்கயத்தண்பணேசெர் புங்கத்தூர்வாழ்சபா... ... *
பதியரசனெழில்பொருளினுல் ... ... *
ஆர்பெருகுநிறைகல்வி யைவிளக்கஞ்செய்வ ... *
தாருமச்சிற்பதிப்பித் ... ... *
தருளுமென்றருளியசபாபதிப்பூபால ... ... *
னுலகுளோர்தமக்கு... ... ... *
அரியவான்மாவினுக்கோர் துணேச்செங்கண்மா ... *
லல்லாதுவேறின்றென ... ... ... *
அறிவதுவிளங்கவிக பரசாதநங்களுக் ... ... *
காதரவுதந்தனனரோ ... ... *

தேவபுரம்-செங்குந்தரில்

இராமசாமிமுதலியார்குமாரர்

## ஆறுமுகவுபாத்தியாயர்

இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடில்விருத்தம்-

கருணேமழைபொழியுமுகில்வண்ணன்சரோருகக் *
கண்ணனற்புருஷோத்தமன்... ... ... ... *
கழலினிற்கன்புருகுமின்பநேயன்ப்ரபல ... ... *
கைசிகர்குலத்துதித்தோன் ... ... ... *
தெருளுறுகுசேலமுநிகலியுற்றுமாலிடஞ் ... *
சேர்ந்துதிருபெற்றகாதைத் ... ... ... *
திணேயதனிலோங்ககுற்றம்பாகைதன்னில்வளர் ... *
செல்வனமைதுலவிபவன்... ... ... *
அருமையொடிலக்மிபதிசொற்கீர்த்தநங்களின் ... *
னணிதணேயுணர்ந்துவேலு,... ... ... *

ராதினம்பெருசபாபதிமாலினுதவியா ... ......*
லம்பொற்களத்தூரில்வாழ் ... ... *
கருதரியகங்கைகுலநாயகன்வேதகிரி ... ... *
கல்விமானுதவுதனயன்... ... ... ... ...*
கவிஞனுமாறுமுகவேள்பார்வையாற்கல்வி... ...*
யச்சிற்பதித்தனனரோ ... ... ... ... *

திரிசிரபுரம்-வித்வான்

## வி-கோவிந்தபிள்ளையவர்கள்

குமாரர்

நாராயணசாமிபிள்ளை இயற்றியது.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஏர்மருவுகனிபொருவுபவளவதரத்துளவு............*
வெயிறுறுகண்ணுறவயில்தர.....................*
வெங்குநிறைகண்ணனுக்கங்கையிடியவலின ... ...*
வின்னறந்தின்படைந்து.............. ...... ...*
தார்மருவுமன்பருக்கன்பனெனவைத்திபர... .......*
நாதாவெனப்பரவிவான்................ ... ...*
நற்குசேலன்மறைய வர்க்குலேசன்கொண்ட......*
ஞானவறிஞன்சரிதையைப்.............. ... ...*
பார்மருவிபரவியாநந்தசிந்திற்படிய.............*
பாடினனடகமதாய்ப்.............. .............*
பாவலனிலக்மிபதிபூவலந்தனிலதைப்...............*
பழநமிகு பொற்களந்தை......... ... .........*
யூர்மருவுவேதகிரிபாவலன்முச்சங்க......... .......*
வுயர்தமிழ்க்காவலன்று.........................*
ஹுதவுபுதல்வன்வழூஉக்களைகளைந்தச்சிலிட்.......*
டோங்கினனறுமுகனே........ ......... .......*

மதுரைக்கல்விச்சங்கத்துத்தமிழ்ப்புலவர்-களத்தூர்
வேதகிரிமுதலியார் -குமாரர்

## கந்தசாமிமுதலியாரியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிவளர்மண்ணேர்புகழலட்சுமிபூபதிமநது மகிழ்ச்சி கூர்ந்து அணிகிளருங்குசேலமுநி வாக்கிய நாடகமற்றைந்தா னறிவின்மிக் கான், றுணிவுதருசபாபதிமாலச்சியற்றித்தாருமென்றுசொன்ன ன்முன்னாள், பணிவுபெறப்பிழைதிருத்தி யாறுமுகப்புலவனச்சி ற் பதிப்பித்தானே ... ... ... ... ...*

மேற்படிபுலவர்குமாரர்.

## சுப்பராயமுதலியாரியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

உச்சிதமாக் குசேலோப வாக்கியநாடகம்பணித்தா னுலகின்மா ந்தர், மெச்சிடு மிலட்சுமிவேள் கருணீகசபாபதிமால் விரும்பி யீதை, அச்சிடுவீரெனவுரைக்கப் பொற்களத்தூராறுமுக வறிஞ னன்பா, லெச்சமயத்தோரு மெழுதாவெழுத்தின் மநமகிழ வி னைவித்தானே ... ... ... ... ... *

சென்னைக்கல்விச்சங்கத்து-வித்வான்

## வேலாயுதவுபாத்தியாயர்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடில்டியாசிரியவிருத்தம்.

மாணருமந்தணர்குசேல வாக்கியநாடகம்பணித்தான்வளமி க்கோங்கும்,வீணருனை தவிர்த்திடுமிலட்சுமிபூபதிதாச வித்வவே ந்த, ஞணமறுகருணீக சபாபதிமாலச்சியற்ற நவிலப்பொற்பா- வாணருக்குளுயராறுமுகப்புலவனச்சடித்துவழங்கினனே ...*

இதுவுமவர்பாடியது.

எண்ணியவெலாமுடிக்குங்குசேலோபவாக்கியஞ்சீரொழில்பெற் றூரும், புண்ணியமெலாமொருங்குதிரண்டனையலட்சுமிபூப்புல வன்செய்தான், கண்ணியவான்கருணீக சபாபதிமாலச்சியற்றிக் கனந்தாவென்ன, நண்ணியதையாறுமுகன் பிழைதிருத்தித்தேவ மூதா நல்கினனே ... ... ... ...*

# எச்சரிக்கை.

ஸ்ரீராம்பதிதனிலேவரும்சேடனணைமீதில் ... ...*
ஏரார்துயில்கண்ணுமுகில்வண்ணா..... ........எச்சரிக்கை

அருமாமறைமுதலேயாதி மூலமென்னுங்கரிமுன்
பெரிதாங்ககபதிமேல்வரும்பெருமா ... ...னெச்சரிக்கை

இந்திராதியர்போற்றத்தூணிலெழுந்துநரவரியாய்
வந்தாய்பிரகலாதன்புகழ்வாழ்வே...... ... ...எச்சரிக்கை

அயனுயுவுசரியாய்சலமயமாமந்தநாளில் ....... ...*
செயனுலிலையின்மேல்தவழ்செல்வமே...... ...எச்சரிக்கை

பதுமாசுரன்றுரத்தஅரன்பயந்துஐவேலின் ... ...*
புதரில்நுழைந்துனையேதொழும்புநிதா ... ...எச்சரிக்கை

சதமென்றுந்தன்பதபங்கயஞ்சாத்துமடியனுக்குன்
பதிதந்தெனையாளும்லட்சுமிபதியே ... ......எச்சரிக்கை

## மங்களம்

இ-ம்-சௌராஷ்டிகம்.

ப்ல்லவி.

மங்களம்மங்களம்-நித்யசுப-மங்களம்மங்களம்.

அநுபல்லவி.

திங்களணிவர்முதலெங்கும்புகழநின்றத் ......*
துங்கன்கெருடன்மீதில்தங்கும்ஸ்ரீஅரிக்கிப்போ -மங்கள

[சரணங்கள்]

ஆதிபரமு மாகியே-உலகிருக்கும்
பேதவுயிர்க்குள் ளாகியே
தீதையறுக்கும்ரவி...... ......சோதிதிகிரிதனை
வாதுபுரியுங்கராமீதில்... ..... விட்டவனுக்கு- மங்களம்

பாசஅடவி நீக்கியே·காமதுஷ்ட்ட
நேசருறவைப்போக்கியே
பேசரியஅரிதாச ... ... ரடிகள்நிதம்
பூசைசெய்பவர்பாப ...நாசஞ்செய்பவருக்கு-மங்கள

கெதியென்றடிபணிந்த-குசேலருக்கு
அதிகசெல்வந் தந்த
புதியதுவாரகைலட்சுமி ... பதியெனவளரும்
வதியாகும்ரதிதேவி... பதியைப்பெற்றவனுக்கு-மங்கள

# தனிக்கீர்த்தநம்.

தரு-இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டான்குசேலமுநிவன்-ஸ்ரீஅரிசேவை
கொண்டான்பூசுரத்தலைவன்

அநுபல்லவி.

அண்டர்தமக்கமுதம்... ... ...பண்டுதவுமுசித
புண்டரீகாட்சனை ... ... யண்டியகமகிழ-கண்டா

[சரணங்கள்]

மேவாப்பூமாய்கைவிடுத்து-அன்புடனெமைக்
காவாயென்றே யடுத்து
பாவால்பன்னிருவரும்...... ...ஓவாமலேதுதிக்க
மூவாமுத்தியளித்த ... ... ...தேவாதிதேவனைக்-கண்டா

ஆதியிலரியைக் கூடி-மிகவும்படித்
தோதியநேசத்தைத் தேடி
மாதவன்புகழைமந ...தோறும்வேதியன்தரித்ர
வாதைகள்சிதறவந்தச் சீதரன்பொற்றிருபதம்-கண்டா

ஆயர்கள்குலந் தழைக்க-தேவகியெந்தன்
சேயேயென்றே யழைக்க
தாயேயென்றெனவந்த... ...நேயன்லட்சுமிபதியை
நாயகாவென்னும்பதி - னாறுயிரம்ஸ்ரீகள்நடுவில்கண்டான்

மாதாந்துரௌபதைப்பண்டு-கௌரவர்கள்
சூதாலவமானமே கொண்டு
வேதாந்தப்பொருளேநீ-யாதாரமென்றழைக்க
மீதாயம்பரமீந்த ... ராதாமநோகரனைக்-கண்டான்

வாழிவிருத்தம்.

மாமறைவாழியாயர்மனைவளர்நெடுமால்வாழி......*
மன்னுயிர்புடைத்தழிப்போர்மங்கையருடனேவாழி
நேமமாய்க்குசேலர்காதைநெடுநிலவரப்பிற்சொல்லி
நெஞ்சகமகிழும்லட்சுமிபதிநிறைவோடும்வாழி.*
பூமனூர்புகழவச்சிட்டிடுசபாபதிபூவாழி ..........*
பொருத்தமும்பார்வையிட்டபுனிதறுமுகவேள்வாழி
சேமமாம்புங்கத்தூருசெல்வரிலுயருங்கியாதி ...*
சேர்சபாபதிமன்கல்விதிகழச்சுக்கூடம்வாழி ...*

ஸ்ரீ

இராமஜெயம்.

# நூன்முகம்.

வடதிசையிலே, துவாரகாபுரிசமீபத்திலே, நீர்வளநிலவளமிகுந்த திவ்வியதேசத்தோடுகூடி ஒருபருவதம்விளங்கும்அப்பருவதச்சாரலின்கண்ணே தபோதனரொருவரென் றோருருண்டு அவ்வூரில் குசேலனென்னுமோரந்தணன் தான் வழிபடு கடவுளாகிய திருமாலைத் தினந்தோறுஞ் சிந்திப்பவன், பெரியோர்களை வந்திப்பவன். பேதைகளை நிந்திப்பவன், ஸ்ரீகிருஷ்ண பகவானோடுசந்திப்பவன், ஆதியிலே சாந்திபமகாமுநிவனிடத்து வேதசாஸ்திரபுராணங்க ளியாவற்றையுந் தானுங்கிருஷ்ணபகவானுமாகக்கற்றுக் கல்வியின்மேம்பாடுடையராயிருந்தனர் இப்படியிருக்கக் குசேலருக்கு வறுமைவந்துகந்தைத்துணிகளணிந்துகடவுளைப்பணிந்துமுத்தியேகதியெனத்துணிந்து(ஐயமிட்டுண்) என்ற ஔவைவாக்கியத்தை உறுதிகொண்டு இரந்துவந்து நாடோறும் ஓரதிதிக்கிட்டுத் தானும்புசித்துவருபவர் கற்புநிலைமைவழுவாதுநடக்குந்தன்மனையாளாகிய சுசேலையுடனே பாசபந்தமென்னும் இல்லறத்திலிருந்து இருபத்தேழுபுதல்வரைப்பெற்றுச் சுவாமியைத்துதித்துமதித்துவருபவர், கேட்பவருக்கில்லையென்னாதுதருபவர்,எந்நாளும்வறுமையே பெருமையென்று யாசகஞ்செய்துக்கொண்டுவரும்புல்லமுதைச்சுசேலையுந்தானும் பிள்ளைகளும்புசித்துவருவார்கள் இவ்விதத்துன்பத்தோடு மிருப்பதைச்சுசேலை என்பவள்நல்லசௌக்கியத்தை யடையாமலிருக்கிறோமேயென்று மநதில் விசனங்கொண்டு அவ்வூரிலிருக்குஞ்சில ஐசுவரியவான்களைக்கண்டாலும் தன்மநதில் பரமனருளால்பாக்கியங்கிடைத்தால் நலமென்றெண்ணுவாள் பலவிதமாகச்சுவா

மியைத் தியானம்பண்ணுவாள் நாயகன்சொல்லைக்கடவாள், விரோதமாகநடவாள்,ஸ்ரீ அரியே எங்களுடையவறுமையை நீக்குமென்று போற்றுவாள்,சௌந்தரனென்னு மந்தணன்செய்தவத்தாலுற்பவித்த மாதுசிரோமணியாகிய சுசேலையென்னு முத்தமி,தமதுபிள்ளைகள் அயற்பிள்ளைகளோடுவிளையாட விரும்புவார்கள் பலகாரவர்க்கங்களுங்கேட்பார்கள் வீட்டிருப்பறியாச்சிறுவருக் கென்னகொடுப்பதென்று வருந்தித் தன்கணவரிடத்துவந்து பலவாறுபுலம்பிச்சொல்லுகிறாள் ஆண்டவரோ நீர் துறவறக்கியானமுடையவராய்ப்பிள்ளைகளை மறந்திருக்கிறீர்நாம்யாசகஞ்செய்து சீவனஞ்செய்வோமொன் றமதுமநதுக்குள் சற்றேனுந் தோற்றவில்லை நமதுபிள்ளைகள் படுந்துயர மின்னதென்றுசொல்லமுடியாது,என்று-நாணம்-மடம்-அச்சம் - பயிர்ப்பு என்னும்இந்நான்குகுணங்களும்பொருந்திகற்புநிலைமைவழுவாதுநடக்கும்உத்தமசிரோமணியாகியசுசேலையென்னுமாது தனதன்பிற்குகந்த நாயகரான குசேலமகாமுநிவரைநோக்கி, சுவாமி நாம் எந்நாளும் வறுமைப்பட்டிருந்தால் உலகோர்க்கிழிவாயிருக்கின்றதே நமதுபிள்ளைகள் பசியாலிளைத்துக்களைத்துநலிந்து மெலிந்து இருப்பதால் தாங்கள்பூர்வீகத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானுடன் ஓர்பள்ளியில்வாசித்திருந்தீர் உலகெங்கும் பிரசித்தமாயிருக்கின்ற நீர் அவரிடஞ்சென்று நமதுவறுமைநீங்கும்படி யாதாகிலுமோர்பொருள் பெற்றுவருவது உமதுகடமையென்றுசுசேலையென்னுமாதுசொல்லக்,குசேலனென்னுமுநிவர் தன்மனைவிமுகம்நோக்கி, பெண்ணே முன்செய்தபலன் பின்புபெறுவார்கள் இதையறியாமல்யோசிப்பதென்னபுண்ணியவதியே இச்சரீர நிலையில்லாக் காயமாகையால் ,பிள்ளையேது பெண்ணேது மண்ணேது பொன்னேது இதெல்லாநிலைநில்லா துஜகதீசராகிய ஸ்ரீமந்நாராயணர் எள்ளுக்குளெண்ணெய்போல எங்கும்நிறைந்திருக்கிற ரவருடையபெருமை தேவராலும் யாவராலுஞ் சொல்லமுடியாது அவனைமநதில் தியானித்தால் நமக்குச்சுவர்க்கமாகியபதவிகிடைக்கும் அப்பகவானவர் கல்லுக்குள்ளிருக்குந்தேரைக்கும் அன்னமிடும்போது நமக்களிப்

பதருமையா இவ்வுலகின்கண் தானதருமஞ்செய்து ஸ்ரீ அரிபதம்பெறுவதே நலமென்று முநிவர்சொல்லச் சுசேலையென்னுமாது தன் நாயகரைப்பார்த்து சுவாமி தாங்கள் தெய்வங்கொடுக்குமென்றுசொல்லுகிறீர் அது இவ்வுலகில்நடப்ப தரிது இதற்குத் திருஷ்டாந்திரம் "தெய்வத்தாலாகாதெனினுமுயற்சிதன், மெய்வருந்தக்கூலிதரும்,, என்றதுபோல் தாங்கள்கூறுவது சரியல்லஎன்று சுசேலைகூற குசேலர்மநக்களிப்புடன் ஓ பெண்ணே நான் எனது அன்பனாக்காண அவ்விடம்போனல்யாதாவதொன்று கொண்டுபோகவேணுமே "முன்கையாடினல்முழங்கையாடுமென்பதுபோல,, ஒன்றுகொண்டுபோக வேண்டுமே யென்றுகூற(நாயகிகணவனைநோக்கிச்சொல்லுகிறுள்.)

சுவாமி நாய்-தினம்புசித்து மிகுதியாயிருக்கும் நெல்லை அவலிடித்துத்தருகிறேனென்னச் சுவாமி அதிகமகிழ்வடைந்து பெண்ணே உன்மநச்சம்மதியின்படி செய்யென்றுகூற அவ்வாக்கியத்தைத்தள்ளாது மநங்கொள்ளாமகிழ்ச்சியடைந்து சுசேலையென்னுமாதி அவலிடித்துத்தன் துநாயகராகிய குசேலமுநிவரதுமாசுபடிந்த கிழிந்தவஸ்திரத்திற்கெட்டியாய்த்தட்டி முடிந்து முநிவர் கையிற்கொடுத்துச் சுவாமிதாங்கள் உமதுசிநேகிதரிடத்திற்சென்று யாதாவதுகொண்டு வாருமென்று விடைகொடுத்தனுப்பமுநிவர்விடைபெற்றுப்பெருமகிழ்வுற்றுக்-காடு- மலை-வனம்-வனந்திரங்களைக்கடந்துஇந்தப்பெரியசமுத்திரம்தாண்டுவதெப்படியென்று மநதில்விசனங்கொண்டு, மாலுமியைக்கண்டு அதிகதாழ்மையாகவும்எழ்மையாகவும்உபசாரவார்த்தைகள்சொல்லிவேண்டிக்கடல்தாண்டித்துவாரகையைக்கண்டுஆநந்தங்கொண்டு,அந்நகர்க்காவலாளிகளுக்காசீர்வாதஞ்செய்து ஐயாநான்உங்களைக்காணப்பெற்றது முன்செய்ததவப்பலன்என்றுநமஸ்கரித்து அந்நகரிலுள்ள வேதியர்வீதிகளும் விதவிதமான சாலைகளும் மாடமாளிகைகளிலேநவமணிகளழுத்திய விந்தைகளும் கந்தகளபகஸ்தூரி கமகம வென்றுவாசம்வீசும் பரிமளமும், கமுகு கரும்பு-கதலி-பலா-முதலிய குலைகள்தொங்கும் விந்தைகளும்

பசுக்கள்மந்தைகளும் முத்துக்கள்தோரணமும் புட்பமாலைக ளும் பஞ்சகல்யாணிப்பரிகளும் கரிகளும் தேர்முதலானவை யும்,கோபஸ்திரீகளுடன்வாசுதேவன்ஜலக்கிரீடையாடியதும்தெ ருச்சுவர்களிலெழுதிய சித்திரவிசித்திரமும்,சிசுபாலன்-கஞ்சன் முதலானோர்களை ஸ்ரீ அரிசெயித்த சரித்திரத்தைப் படத்திலெழு திக்கட்டியிருக்கும் வேடிக்கையும் பதினெட்டு மேளவாத்தியத் தொனிகள் அண்டம்பிளக்கும்படி அடிபடுவதும் அளவில்லாச் செனங்கள்வேடிக்கைப்பார்த்துவரும் சந்தடியும் இப்படிநாலு விதமானவேடிக்கைகள் பார்த்து ஸ்ரீகிருஷ்ணபகவான் அரசிரு க்கும் அரண்மனைவாயிலில்வந்தார்.

அவ்விடத்தில்சகலதேசத்தரசர்களும் வந்துகண்ணனைக்கா ண எண்ணங்கொண்டு அவரதுதரிசனை காணமல் அகம்வாடி முகம்வாடி காத்துக்கொண் டிருப்பார்கள் இவ்வளவு என்று சொல்லமுடியாதுஅவருடைய ஆஸ்தானத்திலிப்படி அடங்காத சந்தடியா யிருப்பதனல் குசேலமுனிவர் அவரைக் காணமுடி யாமல்அதிகவருத்தமோடுவிழைந்து சந்தடியில்மெல்லநுழைந் து துவாரபாலகரைக்கண்டு,ஆநந்தங்கொண்டு,ஐயா துவாரபாலக ரே நானும்ஸ்ரீகிருஷ்ணபகவானும்ஓர்பள்ளியின்கண்வாசித்தோ ம்நான் அவரைக்காணும்படி விருப்பங்கொண்டுகாடுமலைவளநா தரங்கடந்து மீகாமனைவேண்டிக் கடல்தாண்டிவந்தேன் அவரு டைய பாததரிசனை காணவிருப்புற்றதால்தாங்களென்பேரிற் ற யை கூர்ந்து மநந்தேர்ந்து இவ்விடம்பேர்ந்து அவ்விடஞ்சே ர்ந்து அவருக்கறிக்கையிட்டு வந்தால் நலமென்று குசேலர்சொ ல்லப்,பக்கலிலிருக்கும்சனங்கள் இவரது வேடத்தைப்பார்த்து ப்பரிகாசமாகிய வார்த்தைகள்பேசசுவாமிசந்நிதிகாக்கும்துவா ரபாலகர்கள்கண்டு தூஷிக்கவேண்டாமென்றுதடுத்து இவர்மகா புண்ணியவான் இவரது மகிமை எப்படிப்பட்டதோ வென்று பலவாறுகூறி இம்மகான்மாவைத் தரிசித்தால் ஸ்ரீஅரிபதஞ் சேரலாமென்று துவாரபாலகாள் குசேலமுனிவர்க்கு அதிகவ ணக்க மிணக்கத்துடன் சாட்டாங்கதெண்டஞ் சமர்ப்பித்து எஞ்சலில்லாமல்அஞ்சலிசெய்துஐயாமுநிவரே இவ்விடமிருங்க

ள்நாங்கள் அவ்விடஞ்சென்று உமதன்பராகிய ஸ்ரீகிருஷ்ணபகவானைக்கண்டு அதிசீக்கிரந்தி லட்டியில்லாதழைத்து வருகிறோமென்றுவிடைபெற்றுக்கொண்டு எழுபத்திரண்டு வாசற்படிகடந்துவிரைவாய்நடந்து அவ்விடஞ்சென்றுநின்றுபார்க்க ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பாங்கியர்கள்சூழ்ந்துநிற்பதும், ஆலவட்டம்வெண்சாமரைகளேந்திநிற்பதும், அளவில்லாத நட்சத்திரங்கள்சூழ்ந்தசந்திரன்போலப்பிரகாசமாய்த் தோன்றுவதுபோலவும்பரிமளாதிகளணிந்துவீசும் மாதர்கள்சூழ்ந்துசகலவைபோகனாய் விளங்கும் சுவாமியைத்துதித்து மதித்து, எமதாண்டவரே குசேலனென்னுமோரந்தணர் தங்களுடன் பள்ளியில் வாசித்தாராம் அவர்தான் வந்திருப்பதாய்த்தங்களுக்கு அறிக்கையிடக்கட்டளை யிட்டனுப்பினார் ஆகையால் நாங்கள் தங்கள்சமுகந்தேடி வந்தோமென்று கூற, சுவாமியார் அதிகமகிழ்வடைந்து அவரைச்சீக்கிரத்தில் அழைத்து வரும்படிக்கட்டளையிட்டார். அவரது விடைபெற்றுக்கொண்டு துவாரபாலகர் குசேலரிடம்வந்து ஐயா முநிவரே தங்களைச் சுவாமிஅழைத்துவரச்சொன்னாரென்றுகூற முநிவர் அளவில்லாச்சந்தோஷ மடைந்து அரிசேவகாள்பின் றொடர்ந்து சுவாமிசந்நிதிவந்து அவ்விடத்தி லிருக்கும் சித்திரவிசித்திரவிநோதங்களைக்கண்டு களிகூர்ந்து ஸ்ரீ மந்நாராயணர் சேவை இன்று கிடைத்ததென்று அகமகிழ்ச்சிபெற்றுஆநந்தமுற்று நாடகசாலைகள் நவரத்நமேடைகள்பச்சைக்கற்களாற்கோத்து தொங்கிய தோரணங்களும் ஸ்படிகத்தாற் சுவர்களும் தாளமேள தம்புரு வீணையாதிமுதலிய கோஷ்ட்டங்கள்கடலொலிசத்தம் போலகேட்பதும் பதினாயிரம்கோபஸ்திரீகளுடனும் காளிந்திதேவிசாமரைபோடவும் சாம்பவதி பொன்றுகி லேந்திடவும் மித்திரவிந்தை மடிபடாத வெள்ளிலைமடித்துக் கொடுக்கவும், சுதந்தி கழல்பிடிக்கவும், இலட்சணைஎச்சரிக்கை செய்துசூழவும் சுமித்திரா மௌலிகையேந்தித் தாழவும் உருக்குமணிதேவிசுவாமிமார்பின்மீதிற் சாரவும் சத்தியபாமை தூடைமீதிற்காலைநீட்டி ஆநந்தங்கொண்டேறவும்இவ்வளவு உல்லாசனாயிருக்கும் ஸ்ரீகிருஷ்ணபகவானைக் குசேலமுநிவர்பார்த்து அன்புடனும் இன்பு

டனும் வணங்கி இணங்கி துதித்துமதித்து ஆநந்தத்துடன் நிர்க்க சுவாமி முநிவரைப்பார்த்து அப்பா எமதன்புள்ள சிநேகிதா நீயும்நானும் ஒருபள்ளியில் படித்தோமே நீ என்னைமறந்து விட்டாய் நானுன்னைக்கண்டு வெகுநாளாகிறது உன்னுடையயோ கக்ஷேமமென்ன வென்றும் சுவாமிஉலகவாழ்க்கை தெரியாதவர் போலும் முநிவரைவினவ, அவர்சும்மாநிற்க ஓ முநிவரே நீர் இத்தனைநாள் பொறுத்துவந்தீரோ எனக்கென்ன கொண்டுவந் தீர் உமதுவஸ்திரத்தி லென்னமுடிந்து வைத்திருக்கிறீர் அதை யென்னபார்ப்போமென்றுமுநிவரது கந்தைவஸ்திரத்தைப் பிடித்தி ழுத்து அதில்முடிந்திருக்கும் அவலை யவிழ்த்து அதில்ஒருபிடி அன்புடனள்ளிச் சுவாமியானவர்புசிக்க அதிகமதுரமாயிருப்ப து கண்டு மறுபடியுமொரு பிடியவல்அள்ளி வாயில்வைக்குந்த ருணத்தில் அருகிலிருக்கும்உருக்குமணி தேவிதடுத்துவிட்டாள் சுவாமியானவர் முதற்பிடியுண்டமாத்திரத்தில் தமதன்பனுகிய குசேலற்கு அட்ட ஐஸ்வரியமும் பொருந்தும்படிக் கிருபை செய்துவிட்டார் மறுபடியுமொருபிடியவல் அள்ளியதைத்தடு த்தகாரணமென்ன வென்றால், அப்பிடிபுசித்தால் குசேலமு நிவருக்கு சுவாமியடிமையாகவேண்டுமென்று அம்மையானவ ளறிந்துதடுத்துவிட்டாள் அவ்விடமிருந்தயாவர்களும்அவ்விஷ யமறியார்கள், ஆகையால்மிகுதியாகிய அவலைக்கந்தையில்முடிந் துதமதிடம்வைத்துக்கொண்டு ஓ முனிவரேநீர்வந்து வெகுநேர மாகிறது போய்வாருமென்று சுவாமிகூற முநிவர் விடைபெற் றுக்கொண்டுதன்னிருப்பிடம் வரகோபஸ்திரீகள் மநவெறுப்பு டன் பலபலவிதமாகப் பேசிக்கொண்டிருக்க சுவாமியானவர் குசேலமுநிவருக்கு வறுமைநீங்கச்செய்தனர்முநிவர் அதிகமகி ழ்வடைந்துகருமைபொருந்திய கந்தைகளும்நீங்கிதேககாந்தி மேலோங்கி பட்டுப்பீதாம்பரமும்மார்புக்கிசைந்தநவமணிக ளு முத்துமாலைகளும்கூர்மைபொருந்திய் தர்ப்பைப்புல்பௌ த்திரமும்இரத்நக்கன்மோதிரங்களும் காதிற் கவசகுண்டலமும் இவைகளெல்லாமுண்டாகிய தமன்றி அத்தருணத்தில்அந்தரதுந் துபியுடன் தேவர்கள்மலர்மாரிபெய்யவும் ஆதியில் முநிவர்வா

ழ்ந்த குடிசைகள் அஷ்டஐஸ்வரிய மோங்கவும் அவ்வூர்ச்சனங்
கள் பிரமைகொண்டேங்கவும், முநிவர் வறுமைநீங்கவும், யாச
கர்தானம்வாங்கவும், ஆலவட்டம் சிலர்பிடிக்கவும்; அரம்பை மே
னகை ஊர்வசிதிலோர்த்தமைநடிக்கவும், வேதியர்கள்வேதகோ
ஷடத்துடன்படிக்கவும்முப்பத்திரண்டுஇராகத்துடன், மேளவா
த்தியமடிக்கவும் இப்படிநாலுவிதவேடிக்கையுடன் வைகுந்தபதி
க்கு நிகராயிருப்பதை முநிவன்பார்த்து சுவாமிசெயலென்று
நினைத்து, தனதுசிங்காரபுரியில்நுழைந்தார் அத்தருணத்தில்சுசே
லையென்னுமாது தன்னாயகர்வருவதுகண்டுபாங்கிகள்சூழ நவம
ணிகளாலிழைத்த தாம்பாளத்திலாலமெடுத்துவந்துநாயகர்க்கு
ச்சுற்றித்தெருவிலூற்றி புஷ்பாதிகளாலர்ச்சனைசெய்து பொற்
பீடத்திலிருத்திசோடசவுபசாரமுஞ்செய்து சட்சுவைபதார்த்த
த்தோடுஉண்டிசெய்துகணவருக்கன்புடனளித்துக்களபகஸ்தூரி
பரிமளாதிகள் கணவர்மெய்யிலணிந்து வெற்றிலைச்சுருள் ம
டித்து அன்புடன்கொடுக்கமுநிவரருந்தி ஆநந்தக்களிப்புடனே
சகலாபரணமுமணிந்த பெண்கள் சூழவும் வெண்சாமரை க
வரி வெண்பட்டுக்குடைகள் விபரீதமாய்ப்பிடிக்கவும் வாத்திய
த்தொனிகளடிக்கவும்அதிகமதனவுல்லாசசாம்பிராச்சியனாய் சப்
பிரகூடமஞ்சத்தில் சட்டதிட்டமாய்ப்படுக்கஅருகிற்பாங்கியர்க
ளடுக்கப் பத்தினியாகிய சுசேலையென்னுமாது நாயகர்தாட்
பிடிக்க இவ்வளவு உல்லாசமாயிருந்தார் அவருடைய பிரதாப
ம் இவ்வளவென்று ஆயிரநாவுடைய ஆதிசேடனாலுஞ் சொல்ல
முடியாது இவ்விதச்செயற்கையைக் குசேலனென்னு முநிவர்
நினைந்து மோசபந்தமாகிய இச்செல்வப்பசாசைத் தான்வேண்
டே னென்று வெறிபிடித்தவன்போல முநிவனெழுந்து ஸ்ரீஅரி
அரி கோவிந்தா அச்சுதா ஆபத்பாந்தவா அநாதரட்சகா நீர்
என்னையறியாமல் எனக்கேனிந்த ஐஸ்வரியத்தைக்கொடுத்தாய்
என்றுபலவாறு சொல்லித்துதிக்க சுவாமி இதுவறிந்துதனதும
னைவிகளோடுதுவாரகையை விட்டுப்புறப்பட்டுதன்னடியனாகிய
குசேலமுநிவர் முன்வந்துநின்றார் முனிவர்பார்த்து வலசாரி
இடசாரியாய்வந்து ஐயனை நமஸ்கரித்து சுவாமி எனக்கேனிந்த

ப்பாபசாகரமானசெல்வத்தைக்கொடுத்தீரொன்றுகேட்க அப்பா நீ அதிகவறுமை யடைந்தபடியால் இச்செல்வங்கொடுத்தேனென்று சொல்லமுநிவர்கேட்டுச் சுவாமி எனக்கொன்றும் வேண்டாமென்றுகூற அப்பா நீ நான்கொடுத்த செல்வத்தைப்பெற்றுக்கொண்டு உன்மனைவி பிள்ளைகள் சுற்றத்தார்முதலானவர்களுடன்சிலகாலமிருந்து அக்காலத்திலென்னை யழைத்தால் என்னுடைய பதவியில் சேர்த்துக்கொள்ளுகிறேனென்று வாக்குத்தத்தஞ்செய்து தமது துவாரகாபுரிக்குப் போய்விட்டார்.

பின்புசிலகாலமிருந்து முநிவர் குடும்பசமேதராய் வைகுந்தபதவியடைந்தார்கள்.

## நூன்முகம்

முற்றுப்பெற்றது.

வாழிவிருத்தம்.

தொல்லுலகின்மறைவாழிவேதியர்கள்வாழிபுவி ...*
துதிப்போர்வாழி ... ... ... *
பல்லுலகமும்வாழிபாவலர்கள்வாழியிதைப் ......*
படிப்போர்வாழி ... ... ... *
சொல்லுமிந்நூலச்சடிக்கப்பொருளீந்தசபாபதிவே
டோன்றல்வாழி ... ... ... ...*
புல்லுகல்விவிளக்கவச்சுக் கூடதொழிலோர்வாழி *
பொருந்தமாதோ ... ... ...*

ஸ்ரீராமஜெயம்.

# சிறப்புப்பாயிரம்.

வல்லூர்.

முத்தலங்காரப்பிள்ளையவர்கள்

மாணாக்கர்களிலொருவராகிய

ம-ள-ள-ஸ்ரீ.

**வீராசாமிப்புலவர்**

இயற்றியது.

பஞ்சபாதம்.

(இன்னிசை வெண்பா.)

செந்தேனேன்கற்கண்டேன் சீனியேன்முப்பழமேன் *
அந்தாரத்தோர்புசிக்குமாரமிர்தேன்-அந்தா...... .......*
ரனாபுத்தூரண்ணலறைந்தசங்கீத...... ...... ............*
வினியமொழிகேட்டோர்க்கிவ்வைந்து ..... ............*

ம-ள-ள-ஸ்ரீ.

பூவிருந்தவல்லி தாலூக்கா-பாடசாலை உதவி உபாத்தியாயர்

**சேஷாத்திரிஐயங்கார்**

இயற்றியது.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

கார்கடலுலகிற்புலவர்களிதயங் ... ... *
களிப்புறவினியகுசேலன் ... ... *

---

* சங்கயாப்புச்சூத்திரம். "காய்முன்னேரும் விளமுன்னேரு-மாமுன்னிரையும் வரும்வெள்ளைக்கே.,, இவ்விதியா லிது காசு என்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாயிற்றவெண்பா.

சீர்மிகுசரிதமுழுதுங்கீர்த்தனையாய்ச் ... *
செய்தனன்செந்தமிழாற்பொன் ... ... *
தேர்படையரசர்மதிக்குநெற்பழனந் ... ...க
திகழுமப்புடையனுபுத்தூர் ... ... *
ஏர்பெறுசுப்பராயன்செய்தவத்தி ... *
லெழுந்திடுமிலட்சுமிபதியே ... ... *

---

வயலெலா நெல்லூர்

ம-௱-௱-ஸ்ரீ.

## பட்டாபிராமையர்

இயற்றியது,

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

உலகுபுகழோருருளையாதவனுங்கடக்கரிய ... *
வுயர்வுமேவும் ... ... *
இலகுமணிமதில்புடையிலெழுந்தவனுபுத்தூரி
லியைந்துநாளும் ... ... *
பலகலைகளுணர்ந்தறிவால்பரமபத்தியுளவிலட்சுமி
பதிகுசேலன் ... ... ... *
நலமிகுந்தசரிதைதனைக்கீர்த்தனையாய்த்தமிழதனி
னவின்றிட்டானே ... ... *

---

பஞ்சபாதம்,

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்

திருமருவுமுரமுடையவரிதாசர்தாசர்க்கு ... *
தாசனெனவந்துதித்துச் ... ... ... ... *
சிறுமையிலுழன்றவரியுழியேகிபாக்கியஞ் ... *
சிதையாமல்பெற்றுவந்த ... ... ... ... *
பிரமகுலமணியாங்குசேலமுனிகாதையைப் ... *
பிடிகீர்த்தனைகளாகப் ... ... *

பேர்பெறுமெழுத்தசைகள்சீர்தளைகளடிதொடைகள்
பிசகாமன்மதுரமொழுக ... ...*
அருமைபுலவர்கண்டமனமகிழ்ச்சியடையும்படி ... *
யறைந்தனனலமிர்தமாக ... ...*
அரிதாசரிதைநிதம்பாராயணஞ்செய்யி .... *
லவருக்கிதேமுத்தியைத் .... ... *
தருமவர்கள்மறமதையெரிக்குமக்கினியென்று ... *
சாற்றுவாரரியபெரியோர் ... ...*
சாற்றினவராரெனில்நல்லனுப்பம்பதிச்............*
சந்திமால்சுப்பரசரு ... ... ...*
மிருவர்களுமுன்றவத்தாலீன்றபுத்திர ... *
னிலகுமாத்ரேயகோத்ரன் ... ...*
இணையிலாப்பததம்ப ரூத்திரனிலக்குமிப்... .....*
பதியரச னெழில் புலவனே ... *

* (நேரிசைவெண்பா)

அண்டத்தமரருக்கு ஆரமிர்தமீந்தாப்போல்......... ...*
பண்டைமுனிகுசேலோபவாக்கியத்தைத்—தண்டமிழால்
கீர்த்தனைகளாகக்கிளர்த்தியதேலக்ஷ்மிபதி.....................*
பார்த்தளித்தான்மானிடர்க்குப் பார்......................*

(*)

சிறப்புப்பாயிரமுற்றியது

[இனி — நூல்வரலாறு கூறுகின்றாம்.]

* இது, நாள்- என்னும்வாய்பாட்டான்வந்தவெண்பா.





நன்றாக: குருவாழ்க. குருவே துணை.

# குசேலமகாமுனிவர்

## சரித்திரக்கீர்த்தனை

## காப்பு

(* நேரிசை வெண்பா.)

சீரார்குசேலர்திருச்சரிதஞ்செப்புதற்குக்..........*
காராருஞ்செந்திருமால் கைப்பிடித்த - பேராரும்*
வல்லாயுதமைந்தென்வாக்கினுக்குமுன்னடக்கச்...*
சொல்லாயோமாமதியேசொல்........................*

ஆசிரியச்சந்தவிருத்தம்.

பங்கசலோசன பாவவிமோசன பணிநடனசயனா... .........*
சங்குசக்கரபீதாம்பரதரனேசகலசராசரமுந்....................*
தங்கியேநின்றதயாபரனேயித்தருணந்தனில்வரவே...........*
அங்கைகுவித்துன்னடிதொழுதேன்ஸ்ரீ-அரிஅரிஅரிஅரியே ...*

## அடியார்வணக்கம்

க-தரு-இராகம்-நாட்டை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்தனம்-வந்தனம்-வந்தனம்... ... ...*

அநுபல்லவி.

ஸ்ரீஅரியைத்தினமுந்துதிபுரியுமடியர்பதம் (வந்தனம்)

---

* மலர்-என்னும்வாய்ப்பாட்டான்வந்தவெண்பா.

(சரணங்கள்.)

ஆசையாம்பிசாசைத் ... ... துரத்தி-மன
தறுவகைக்குறிகளைநெறியுட... ... னகத்தியே
மாசிலார்மேலாசை ... ... ...நிறுத்தி-ஜெக
தீசநேசபரவாசனுகுமரி தாசதாசரடிதூசுகளுக்
வந்தனம் [கிதோ

மன்னுயிர்யாவையும்பார்த்து ... ...மிகு
ஞானராகிஅபிமான ... ... நிலைகள்தந்
தன்னுயிர்போலவுங் கார்த்து ... பெரும்
பன்னகத்திலொளிபுரவியஅம்புஜமென்னுங்கழல்களதை
வந்தனம் [சொன்னபுநிதரடி

எவர்களென்சொன்னாலுமிதங்கி ...... ...... ...புவி
மாதர்மீதில்மனமேதுவி......... ......டாமலே
மௌனராயிருந்து வதங்கி...... ... ...இந்த
புவனம்யாவுமளித்தாளும்லட்சுமிபதிகவனராகிபரகதிதரு
வந்தனம்- ருந்திருவடி

---

## கடவுள்வணக்கம்

உ-தரு-இராகம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

ஐயனேராமையனே ... ... என்சொல்
அபசாரமதையுந்த... ... ...னுபசாரமாகப்பார் (ஐய)

[சரணங்கள்.]

நற்பொருள்பேதமுமதி...... ... லொப்பியகீதமுந்தெளிந்
திப்படியப்படியென்று ...... ...செப்பவுமறிகிலேன்றன் (ஐய)
வெள்ளையாயுன்மீதுசின்னப்- பிள்ளைசொன்னக்கவியென்று
தள்ளுவாயோதிருவுளங்-... கொள்ளுவாயோஅறிகிலேன் (ஐய)

நத்திநத்திச்சொல்லும்பிள்ளைப் பெற்றவர்கள்கொள் ளுவர்போ
லுத்தமனேசித்தசனைப்... ...... ...பெற்றவாலட்சுமிபதியென்
ஐயனே

## சபைவணக்கம்

வசனம்.

கேளுங்கள் சகலவேதசாஸ்திர புராணங்களுங் கற்றுணர்ந்து அதிலிருக்குங் கியானமிர்தம்புசித்து அரிபதத்தியானராய் நிற்கும் பெரியோரோ தேவரீர் பாததூளுக்கொப்புமையாகாமலிருக்கும் அடியேனிச்சபையில்செய்யும்.

கூ-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

பிழைபொறுங்கள்பொறுங்கள்-பெரியோரோயென்
பிழைபொறுங்கள்பொறுங்கள்

அநுபல்லவி.

மழலைச்சொல்களாலரியின் கழல்களைத்துதிப்பதில்
பிழைகள்திருத்திநல்ல... ... வழிகளைத்தந்தெந்தன்-பிழை

[சரணங்கள்.]

பஞ்சலட்சணங்காவியம்... ... ...யாவையுமேநான்
பார்த்தறியே.................... ...னறியேன்
மிஞ்சுமுங்களைநாடிக்.........கொஞ்சுமிப்பாலகனை
வஞ்சனைசெய்யாம லின்சொலாய்க்கொண்டெ
பிழை. [ந்தன்

(வ ச ன ம்.)

கேளுங்கள்சபையாரோ இந்தப்பூலோகத்துள் சென்மித்துழலப்பட்ட சென்மங்களுக்கெல்லாம் மேன்மையானது எதுவென்றால்.

ச-தரு-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

மானிடசெநநமேபெரிது-மதி
மயக்கந்தெளிவ திதிலரிது

அநுபல்லவி.

மாநிலமதிலுள... ......மட்டிச்சடிலங்களாய்த்
தேனிலீபோலத் ...திகைத்துப்பிறப்பதிலும்-(மானி)

[சரணங்கள்]

முந்திபூஜாபலந்...............தேடி-இது
ஐந்துஅறிவுகளால்...... ......கூடி-வந்த
இந்தபிறப்பில்கோ..............விந்தன்பதமலனாச்
சந்ததமனதினில்...... .........வந்தனெசெய்யவும்(மானி)

மோகபாசநிலை... ... .. ...கெட்டு - மூ
வாசைகளதனையும் ... ... ...விட்டு - அதி
வேகமதாய்ப்பர........... .......லோகநாயகனை
நாகசயனவென்........ ... ...றேகபஜனைசெய்ய(மானி)

ரதிபதிசெனகஸ்ரீ...........ராமா-துவாளாய்
பதிவளரும்பரந்...........தாமா-லட்சுமி
பதிதாசனையாளப்......... ... .........பரமதயாகர
நிதியேக்ஷீராப்............ ... பதிசயனுயென்(மானி)(ரு)

வசனம்.

ஆகையாலிந்த நரசன்மத்திலேதானே நாம் அரியதமடையவேண்டும் இதுதப்பினல் எந்தசன்மம்வாய்க்குமோ அறியோ மிதற்குச்சாட்சியாய் நமக்குமுன்னோர்கள் ஸ்ரீமந்நாராயணரைத் துதித்து அதின்வழியா யவர்திருவடியடைந்தார்கள் அவர்களாரென்றல்.

(கியால்-ஆசிரியச்சந்தவிருத்தம்)

வியாசபிரகலாதம்பரீஷ விபீஷண ரனுமார்குகன்...... ......*
நேசமாம்பராசர் சுகர்பன்னிருவர்சபரிசுக்ரீபர்காண்......*
தேசுலாவசுதேவர்விசயர்தெளிவிதுயர் துரோளபதிகுசேல ர்...*
மாசிலாகெஜராசனும்வெகுமனுவுகண்டசடாயுவும்........*

பேசில்மிகுராமதாசர்விடலர் பெரியதாசர்கபீரனும்.........*
வாசுதேவனைமனதினினைந்தவர்வனசமலரடிசேர்ந்தனர் ...*
காசினிதனிலின்னமன்பனாக்கழறவறியாச்சிறியன்யான்... ...*
கேசவாத்பரமேபரமமரிதாசரேயிதற்காதரம் ... ......(௬)

வசனம்.

ஆகையால்லிதிலொருவராகிய குசேலனென்னும் பிராமணோத்தமர் தன்மனையாள்சுசேலையுடனே அரிபதமடைந்த சரித்திரத்தைச்சொல்லவாரம்பிக்க ஸ்ரீமத்பாகவதோத்தமராய். துவாரகாவாசரா,யசோதாநந்தனராய்தேவகிவசுதேவகுமாரராய்,பூதகிபிராணத்தையுறிந்தவராய் துரௌபதிமானரட்சணராய், பிரளயகாலாக்கினிபட்சணராய், ருக்குமணிமனோரஞ்சிதராய்,காளிங்கன்முடியி னடநராய்,கபடநாடகவேணுவினோதராய், ஜராசந்தசிசுபாதந்தவக்கிர துஷ்டநரநாயகர்மதமழித்தவராய்,ஜாணூர்மல்லவிநாசகாரணராய்,அன்பர்மனமென்னுங்கமலத்தில்வாசராய், கஞசனைக்கொன்றவராய், கோபசுந்தரிகள்வஸ்திரபங்கராய்,கோடிமன்மதஅலங்காரராய், கோடிசூரியப்பிரகாசராய்,இந்தப்பதிநான்குலோகத்தில்சஞ்சரிக்கும்எண்பத்துநான் கிலட்சங்கோடிசீவாத்துமாக்களுக்குள் ளாதாரகர்த்தராய்,என்னாண்டவராய், மஹானுபாவராய், விளங்குஞ்ஸ்ரீகிருஷ்ணசுவாமியைத்துதிப்பது

ரு-தரு-இ-ம்-செஞ்சுருட்டி-அடதாளம்.

துதியுங்கள் துதியுங்கள் துதியுங்கள்............நாம்
பரகதிசேரலாம்...... ............நரபதிகளேநீர் (துதி)

ததிபிதுஅனுதினம்......... மதியினில்ஸ்ரீலட்சுமி
பதிதாசனையாளும்........... ... ...பதிதனைநீர்(துதி)(எ)

[பன்னிருசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.]

பாகவதமென்னும்புராணமதைசுகயோகி... ......*
பற்குநன்பௌத்திரனுக்குப் ... ... *
பாங்குடன்வினவவெகுசாங்கமாய்க்கேட்குமப் *
பரிச்சித்துபூபாலகன் ... ... *

வேகமுடனுகவேயெழுந்தடிபணிந்துபின் ... ...*
விர்த்தாந்தமென்னவெனவே ... *
வேதவிதிதப்பாதவிப்பிரன்குசேலனென..........*
வெகுதரித்திரமுள்ளவன் ... ... ... ... *
தோகையுடனேயந்ததுவாரகாவாசனடி... ... *
தொழுதுபர கதியடைந்தி ... ... ... *
தோராயமதையிந்தசீரானசபையி லியான்... ...*
சொல்லுவதையின்பமாகி ... ... ... *
மோகசாகரமதில் வீழாமலிக்காதை... ... ...*
முற்றினுங்கேட்பீர்களேன் .. ... ... ... *
மோனநாராயண பரந்தாம னடிதொழுஉ ... *
முதுவரோமுத்தியன்றே ... ... ... ... ... ...*

௬-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

பல்லவி.

அரிஓம்அரிநாராயணகேசவஅச்சுதமுராஅரியே

அநுபல்லவி.

பரகதிதந்தெனைப்பாலியுந்... ... ......துவாரகா
புரியினிலமர்ந்த ... ... ... ... அரியே (அரி)

[சரணங்கள்.]

மாநிலமதில்மிகுமதுராபுரியெனு..............*
மாநகரரு ... ... ... கினிலே
வானவர்தொழுமாவந்திபட்டணம் ... *
வண்மைதரு ... ... மதிலே(அரி)

கோட்டைகளும்பூந்தோட்டங்களுமதில் ...*
குயில்களிசைகள் ... ... ... ... பாட
நாட்டமதாய்நவமணிகளழுத்திய ... ... *
நற்சுவர்நிழ... ... ... ... ... லாட(அரி)

வேதகோஷ்டமென்மேனுமோதிய ... *
விப்பிரசெனங்கள் ... ... சூழ

ஆதிநாராயணனேஅரிஅரியெனு ... ...*
மன்பர்களுந் ... ... ... தாழ(அரி)

கனகதானத்தில்கன்னனைக்கெலிக்கும் ... *
கழறும்விஸ்வா ... ... சியர்கள்
தனத்திற்குபேரனைத்தாட்சிசெய்யவதில்... *
தங்கியவை ... ... சியர்கள்(அரி)

நீதிகளில்சுமந்திரியைப்பழிக்கும் ... *
நெறியுள ... ... ... மந்திரிகளும்
வாதுகள்வந்திடுமளவில்வர்ணிக்கும் ... *
வகையுள ... ... ... ...தந்திரிகளும்(அரி)

ரதகெஜதுரகபதாதிகள்சூழ ... ... *
ராஜராஜ ... ... ... ரிருக்கப்
பதுமலர்விகசிதபரிமளவாடைகள் ...... *
பவனவேகம் ... ... நெருக்க(அரி)

இப்படியாயந்தவளகாபுரியிதற் ... *
கொப்புமையாகு ... ... மதை
செப்பவும்வெகுநாட்செல்லுமே ஆதி... ...*
சேடன்றனக்கு... ... ... மிதை(அரி)

—(*)—

வசனம்.

இப்படிஅதிகஉன்னதமான அவந்திப்பட்டணத்துச் சமீபத்தில் திவ்வியதேசத்தோடு ஒருபர்வதம்விளங்கும், அதின்சாரலில் தபோதனரொன்றொருண்டு.

எ-தரு-இ-ம்-சுருட்டி-மட்டியதாளம்.

பல்லவி.

கண்ணனைவிடயின்னமுமொருகடவுளுலகிலுண்டோஇந்த-கண்

அநுபல்லவி.

விண்ணவர்முத ... ... லெண்ணுமந்த
அண்ணலைத்துதி ... ... பண்ணுமிந்த (கண்)

[சரணங்கள்]

அதிலகுசேலனெனுமோ ... ரந்தணன்
அரியைத்தினமுந்.........துதித்து-வெகு
பதிலமாய்சகலேந்திரி ... யங்களின்
பந்தத்தைப்பரி ... ...கரித்து- மிகு
துதிபெறுபத்மவச்... ... சர்வபூதமெனுஞ்
சொலைத் ... ... தரித்து-இந்தப்
பிருதுவினிலுழல்கின்ற...... சீவமெவையுந்
தன்னைப்போலப் ... பொறுத்து-இந்த (கண்ணனை)

ஆதியில்சாந்திப ... ... னிடத்தி
லரிஸ்ரீகிருஷ்ணனைக் ... கூடி-சதுர்
வேதபுராணங்கள் ... சாஸ்திரம்பல
விளங்கவேபடித் ... தாடி-சொல்லில்
பேதமாம்பஞ்சேந்திரி ... யங்களைப்
பிடித்துள்ளடைத்து ... வாடி-நித்ய
மோதுசந்தியா... ... ... நிஷ்டைதர்மம்
நிலைக்கவும்மைத் ... தேடி-இந்த (கண்ணனை)

கந்தைகளணிந் ... ... தந்தவிந்தை
கருதவென்று ... வில்லை-பாச
பந்தக்கடலை ... ... வென்றமுனியைப்
பார்க்கவுமனம் ... வல்லை-தவ
வந்தணரிவர் ... ... ...செயலைக்கண்டு
மஹாத்மரொன்றுஞ்... சொல்லை-அர
விந்தநயன ... ... ... லட்சுமியதி
பந்தம்விடுவ ... ... தில்லை-இந்த (கண்ணனை)

—*—

அ-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

[கண்ணிகள்;]

முத்திக்குமூலம்அறமெனும்வேதச்சொல்....*
முடிவறிந்தவ ... ... ராகையினால்

நித்தமுமோரதிதிக்கிட்டதின்பின் ... ...*
நீராருந் துவர்தன் ... ... கையினால்
பத்தினியிலையெனப்பாருளோரிகழாமல் ...*
பதியைப்பூசித் ... ... திடுமோர்
உத்தமிபுண்யாவதிகிடைத்தாளென ... *
மெத்தவும்புகழ்ந் ... ... திடுவார்
சந்ததியன்றியோர்சந்ததியரிதெனுஞ்... ...*
சாஸ்திரம் ... ... பொய்யாமல்
மந்தையாயிருபத்தெழுவரையீன்றவர் ...*
மலடென்று ... ... நையாமல்
தெய்வங்கேசவாத்பரமெனச்சுருதிச்சொல் *
தன்மையறிந் ... ... ததனால்
பையரவணைலட்சுமிபதியையனுதினம்... ...*
பணிந்துநிற்பார் ... ... மதியால்

கூ-தரு-இ-ம்-துஜாவந்தி-ஆதிதாளம்.

பல்லவி.

எந்நாளுமிந்தயேழ்மையுடனேயவ ரிருந்தார்மனம்பொருந்த

அநுபல்லவி.

முன்செய்வினையினா ... லதிக்குந்தரித்திரங்கண்டு
முதிர்ந்தபிள்ளைகளுக்கு... மனதில்விசனங்கொண்டு (என்)

[சரணங்கள்-]

பூசுரன்றரும்பிடிபுல்லமுதையு ... ... ... மம்மன்
பொறுக்கியசனஞ்செய்து பொறுமையுடனேயந்த
வாசுதேவனைப்போற்று... ... மதிதிபுசித்தபின்னவ்
வந்தணர்மைந்தர்புண்யா ... ...வதியருந்திப்படி (என்)

ஜெகத்தினிலிவர் ... ... யாசகரேயேவறல்ல
ஜெபத்தையேசெய் துக்கொண்டிருந்தாலிதைவெல்ல
சுகத்தைக்காணேமிந்தச்......சுதரைக்கண்ணால்பார்க்கச்
சேர்த்துயோரார்களென்றசோபத்தைமனங்கொண்டு (எ)

பஞ்செழும்பியகந்தையை ... விடவேறில்லை
பாலர்நிர்வாணமாய் ... பரதவிப்பதுந்தொல்லை
மிஞ்சும்பணிகள்தன்னைக்... கொஞ்சும்புதல்வர்க்கிட்டு
மேன்மையுடனேபார்த்து... வினவவுங்கெதியில்லை(என்)

பாலுஞ்சோச்சியென்னும் ... பாங்கறியார்சிறுவர்
பத்ரதொன்னைகளல்லாற் ... பள்ளயங்களறியார்
பாலப்பிராயத்திலிட்ட .... ... பாலமணிகளல்றி
பணிகள்மணிகளென்னும்... ... பாங்கறியாரவர்(என்)

புரியினிலண்டையசல் ... போகத்துடனிருக்க
புண்யவதியுங்கண்டு ... பொங்கிதனக்குமந்தப்
பரமனருளால்மெத்த ... பாக்யங்கிடைத்ததானால்
பதியைப்போஷணைசெய்து பணியலாமென்றுசொல்லி

என்ன

வேதியன்சொல்லெதிர்... விளம்பாளுத்தமியொன்றை
வேண்டியவளைக்கிட்டி ... வினவாளரிஅரியுன்
பாதபங்கஜலட்சுமி ... பதியைநம்பினேமெங்கள்
நாதனேதாரித்ர ... வாதையைத்தீரொன்று(என்

—(*)—

விருத்தம்.

சக்ரபுரியரசாளசனந்தன்குமாரன்சவுந்தரன்செய்தவத்தால் *
மிக்கவுத்தமியெனுமனைவிவாய்த்தேமனுடன்மீறிவாதாடிகணவு
னக்கணமிறக்கவுயிர்கொடுவந்தெழுப்பிதனைநாடுமாமற்குமாமி,
துக்கந்தவிர்த்துகண்தந்தவுத்தமியெனச்சொல்லலாமிச்சுசேலை,

ம-தரு-இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

அயலார்பிள்ளைகளைக்கூடி ......ஆடுதற்குவேண்டுவதை
ஆசிப்பார்-மெத்த......... ......நேசிப்பார் - அப்போ
தயவாயவர்க்குமிகு.........தாழ்மைகளுரைத்தேயவள்
தாங்குவாள்-நினைந்............ .........தேங்குவாள்
அருப்பமாம்பருப்புவெல்லம்-அம்மாயிப்போதாருமென்
றழுகுவார்-தரையில்,...... ......விழுகுவார் - வீட்டில்

இருப்பட்டியாப்பிள்ளைகளுக் கென்னஇடலாகுமென்று
இன்சொல்லாலவரைக்......... ......கொஞ்சுவாள்
பாலும்வெண்ணெய்வேணுமென்றப் - பாலர்களைப்பார்த்து
அம்மன்-பதருவாள்கிட்டிக் ... ... கதருவாள் - அப்பா
நாளைக்குத்தருவேனிப்போ ...... பாலரோமுலையுருந்தி
நள்ளுங்கள் பள்ளி......... ...... ...கொள்ளுங்கள்
காட்புகடகங்களுக்கு ... ...கத்தும்பிள்ளைகளைக்கண்டு
கத்துவாள்-மனம்........... .........பற்றுவாள்- சின்னச்
சீப்பெடுத்துவாரித்தலைச் சிக்குவாங்கும்போதவர்க்குச்
செல்லுவா-ளாசை........... ......சொல்லுவாள்
இவ்வழிபுதல்வர்போரா ...எவ்வழிபொறுப்பேன்பணி
எத்தனே-எந்தன் ......... ... .........கர்த்தனே-கோடி
திவ்வியரவிதேஜா னந்த ...........தீராலட்சுமிபதிபரி
பூரணா......... ...... ...... ...... ...... ஆதிகாரணா

விருத்தம்

இந்தவிதகோரதாரித்ரசம்சாரகட ... ... —*
னிந்திகளாகாறுமல்தன் ... ... *
மைந்தர்கள்படுந்துயரமதைநினைந்துருகியொரு *
மார்க்கத்தைசிந்தைவைத்து ... ... *
சந்ததயாசாந்தனுகுங்குசேலர்தந் ... ... *
தாள்சுசேலைப்பணிந்து ... ... ... ... *
சுந்தரிமனத்தில்வைத்திருக்குமச்செய்கைகளை ...*
சொல்லுவாள்விள்ளுவாளே... ... *

௰௧ தரு-இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னவென்றுசொல்வே-னென்பிராணநாதா-நா
னென்ன வென்று சொல்வேன்

அநுபல்லவி.

பன்னியவேதபுராணம்படித்தறிந்திருக்கும்உமக்(கென்)

(சரணங்கள்.)

மதமாச்சர்யங்களென்னு............ மாறுகுணமறுத்து
இதமாம்பஞ்சேந்திரியங்க - ளிழுத்துள்ளடைத்துவைத்து
நிதமும்ஸ்நாநங்கள்சந்தியா ... னுஷ்டானங்கள்ஜெபித்து
உதிருஞ்சருகுபுசித்... ......துயிர்கொண்டிருக்குமுமக்

கென்ன

கனத்தசரீரத்தைக்.................கலைத்தெலும்புகளாக்கி
மனத்திலெப்போதுமரியை... ... ...மறவாமலேநோக்கி
சினத்தைஅணுவாகிலுஞ் ......சிந்தைசெய்யாமல்போக்கி
ஜனித்தபிள்ளைகளாசை...... ......நினைக்காதவுமக்கிப்போ

என்ன

தேவரீர்யாசகரொன்று......தெரியலாஞ்சித்தத்திற்கிப்போ
ஆவியுமுடலும்போல ......அமர்ந்திருப்பதுவுந்தப்போ
பாவையாளொருமொழியைப்பயத்துடனுரைப்பேனிப்போ
கேவலமிப்படியிருந்தால் - கேட்போர்க்கென்சொல்வதிப்போ

என்ன

யாதவவல்லவரும்நீ...............ராதிசினேகரொன்றுசென
மோதவுங்கேட்டிருப்பேனம்......முரகரிசமுகஞ்சென்று
வேதனைப்படுஞ்சுதனா...... வேண்டியேதாகிலுங்கேட்டு
பாதுகாத்திடுவதுந்தன்... .........பாரமெங்களையிப்போ

என்ன

சரசிசாட்சனுக்குமிக்க...... ...........சத்பக்தனுயிருக்க
வரமிருஷீடானன்னவஸ்திர ... ... ...வற்சிதராய்நெருக்க
விரிஞ்சியெழுதிவைத்த......... ...விவரத்தையார்ப்பரிக்க
கரியைரட்சித்தலட்சுமி......... ...பதியிருப்பிடமிருக்க

என்ன

௰௨-தரு-இராகம் - எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

இந்தவிதவறுமையையெந்தவிதஞ்சகிப்போமிம்...*
மைந்தர்களைக்காரும்வேதவந்தணரோ - நீர்...(இந்த)

அநுபல்லவி.

சுந்தரமாகுமுடலையந்தப்பழுதாக்கிவிடு ... ......*
மெந்தவழியிலவனைநிந்தைக்குளிழுத்துவிடும்(இந்த)

(சரணங்கள்.)

நச்சுநச்சென்றொருவரை...நத்திக்கேட்கச்சொல்லுமிதை
நிச்சையித்தோருத்தியோகத்தில் ... ...நிற்கச்செய்யாது
மிச்சமாம்பசியைத்தந்து ... துச்சமாகப்பேசச்சொல்லு
மிச்சைகொடுத்தொன்றைவேண்டி-கட்சிகட்டிழுக்கச்சொ
இந்த [ல்லும்

துக்கசாகரத்திற்கிது...... ... ... துணையாகிப்பிறந்தவீடு
இக்கஷ்டங்களுக்குள்ளாகா....... ... ......திருக்குமவரோ
மிக்கபுண்யர்களந்த..................வக்ரனைச்சிரமறுத்த
சக்ரலட்சுமிபதிபாத - சந்நிதியைத்துணைக்கொள்ளும்
இந்த

௰எ - கந்தபத்யம்

இப்படிசொல்லுமந்தணன் ... ... *
ஒப்புவமையிலாதமனைவியுறுவதனம்பார்த்... ...*
தப்புறமோர்மொழிசெப்புவன் ... ... *
ஒப்பற்றவளென்றுவாழ்த்தியுவ்வுவனுங்கே ... ...*

௰௩-தரு-இராகம் - மத்தியமாவதி-அடதாளம்.

[கண்ணிகள்-]

பெண்ணேமுந்திசெய்த பலன் .... *
பெறுவார்பிந்திமனிதர் ... ... இதை
எண்ணுமலேகுன்னும் வித... ... ... *
மென்னபுண்ய ... ... வழியே

நித்தானதோஷேணபவே ... ... *
தரித்ரமென்றறிவாய் ... மெத்த
தனப்ரகர்ஷேணகரோதி... ... ... *
புண்ய ... ... ... மறிவாய்

ஜாதஸ்யமரணந் துருவமென்ன ... ...*
வேதஞ்சொல்ல... ... ... மிகு
தியாதியாய்ப்பொருள்தேடிய... ...*
கனத்தையென்ன ... ... சொல்வேன்

தாய்தந்தைகள்தனயர்பந்து... ... *
தமையர்பசுமாத ... ... ருண
மாயவந்தவரல்லால்வேறே ... ... *
மற்றதொன்றல்ல.... ... மானே

செத்தானெனமனதில்வெகு ... ... *
சிந்தைகொண்டழுவார் ... இதைப்
பெற்றானென்னசொல்வோமவர்... ... ...*
பெருமையென்று ... ... சொல்வார்

சரகுதிர்ந்துகொழுந் தெடுக்குஞ் ... ...*
சமமாமிந்தஜெநநம் ... ... இதை
பெரிதாயெண்ணுமவரோ மெத்த ... ... *
பித்தரென்...... ... றறிவாய்

பிள்ளையேதிந்தப்பெண்களேதந்த ...*
வள்ளலாம்வாசுதேவன் ... சிறு
எள்ளுக்கு ளெண்ணெய்போல ... *
எங்குநிறைந்தானென் றறிவாய்

தோலுரித்தபன்னகம்போல்சீவன் ... *
தூறிமற்றோர்பொந்தில்பூர்ந்த ... தாலே
பாலப்பிராயமாய்வருவார்வெகு ... *
காலமிருப்போர் ... ... போலே

பரவைமுதல்மிருகஜெந்துவை ... *
பாலித்திடுபவனே ... ... இந்த
நரசென்மத்துக்கிடுதல் ... ... *
பெரிதாமாஅதைநினை ... ... யாய்

காட்டிலிந்த நாட்டில்முளைத் ... *
திருக்குஞ்செடிகளுக்கும் ... ... புன
லூட்டிவளர்ப்பவனுநமக் ... *
கிடுவானென்றறி ... ... வாய்

கல்லுக்குளிருக்குந்தேரைக் ... *
காகாரமிட்டவனுக் ... ... கெதிர்
நில்லும்நமக்கிடுதல் ... ... *
பெரிதாமாஇதைநினை ... ... யாய்

அண்டத்துக்குள்ளமருஞ்சிறு ... *
பிண்டத்தினிற்கிடுவோன் ... ...நமக்
குண்டாகியபிள்ளைகளுக் ... ...*
கிடுதல்பெரி ... ... தாமா

திர்வியாகுலன்அரியே ஜெக ... ...*
நிர்மாணரட்சகனும் ... ... இந்த
சர்வம்விஷ்ணுமயமென்றந்தச் ... *
சாஸ்திரங்கேட்கிலே ... ... யோ

புதல்வர்களென்றதைமெத்தவும் ... *
புகழ்ந்துசொல்லவந்தாய் ... யந்த
விதனமென்றுகுறிநீ ... ... *
லட்சுமிபதியேநிஜமறி ... ... வாய்

ஆசிரியவிருத்தம்

மாதுகெர்ப்பத்தினிற்றங்குமெட்டாவது ... ... *
மாதத்தில் சீவனல்ல ... ... ...*
மார்க்கமாம்பூர்வசுக்கியானதீர்க்கத்தினால் ... *
மனதில்சஞ்சலம்விடுத்து ... ... *

ஏதுமறியாமலிது வரையிற் பிறந்தூ நா... *
மெண்ணப்படாதபாப ... *
மெண்டிசையிற்செய்தந்தசண்டனிடவாதையி ...*
விழுக்குண்டுவந்தோமினிமேல் - *
பூதலந்தனில்வந்து தர்மதானங்கள் மிகு............*
பூர்த்தியாகக்கொடுத்துப் ... ... *
பொற்பிரகாசந்தங்க நின்றஸ்ரீஅரிபதம் *
பெறுவதேபோதுமென்று ... *
பேதைதாய்வயிற்றைவிட்டுதித்தபின்மாய்கையா *
லவர் நினைந்ததை பிசகியே ... *
பேராசைகொண்டுபெண்மண்ணென்றபந்தமே ...*
பெரிதாகிவாழ்வருலகில் ... ... *

௰௪-தரு-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்.

பெண்ணேயிதைதினமுமெண்ணிப்பெறுவாயரிபாதம் - என்
கண்ணேசுதனொன்றுமனங்... ... கலங்குவதேபேதம்

பெண்ணே

எத்தனைபேர்வயிற்றிலிவ ... ரெடுத்தாரோஜென்மம்-தாம்
பெற்றோமென்றதைசிந்தையில்-வைத்தாலிதுகன்மம்

பெண்

குன்றேபோல்செய்தவினை...குலையாதெதனாலுந்- தர்ம
மொன்றேயதைவெல்லும்-வகையறிவாயானாலும்

பெண்

அவர்செய்நல்தீவினையாலே...யதுகிடைக்கும்-வெறுங்
கவனம்விடவேறேயில்லை...கண்டாயெவருக்கும்

பெண்

நமதுபாலர்களுமுன்... னேதேதுசெய்தாரோ-அந்த
விமலன்அரிலட்சுமிபதி ......விதிப்பதறிவாயோ

பெண்

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

பழிதொழில்கள்செய்தொருவன் பசியினால்மெலிவுண்டு
பாரி யாரணியமேகிப் ... *
பருத்தமதயானையைக் கண்டுகொல் மரவிலால்... *
பன்னகம்வாழ்புற்றிடம் ... ... *
ஒளிவிருந்தெய்யவக் கோளகந்தீண்டவதை ......*
யோரம்பினாற்கொன்றனன் ... ... *
ஓங்கும்விடமேலிட்டுதானுமந்தகனுலகை .......*
யோடினான்குலேகள்செய்வோன் ... *
அழிந்தஅரவங்கரிமனிதனிம்மூன்றையும் ... *
அவிடமோர்ஜம்பு கண்டு ... ... *
ஆசையுடனத்தியையென்திங்களுண்ணலாம் ... ...*
அரவமதையிரண்டுநாளைக் ... ... *
கழகாகமனிதனையிரண்டுமாதத்திற் ... ...*
கருந்தலாம்நாளைமுதலாய் ... ... *
கடும்பசியடக்கவுமின் றுதினந்தள்ளவுங் ... *
காரணமுமில்லையதனால் ... ... ... *
எழில்பெறுவில் நாரிநரம் பாகினுமருந்துவோ...*
மென்றுக்கடிக்கறந்து ... ... ...*
எகிறிதநுமுனேநிமிர நரிசிரமுந்துணிபட் ... *
டிறந்தவிதமாயுலகினில் ... ... *
அழிவாகும்பொருடேடி யாசையுடனுண்ணுமல் *
அதிதிக்கிடாமலெண்ணி... ... ... *
அலேவோர்களுயிர்களிவ்வாறுகபோமென்றே ... *
அங்கணுநீயெண்ணுவாய் ... ...*

வசனம்.

ஆகையாலிப்படிக்கொத்த பொல்லாதமன்முடையபிள்ளைகளையிரட்சிக்க யான் சமர்த்தனேவேனே எல்லா வுயிர்களையுங் காக்கசர்வேஸ்வரனென்று மனதில் விசாரணுய்சொல்வதைக்கேட்டு சுசேலையம்மன்பிராமணனாப்பார்த்து சொல்லுகிறவிதமெப்படியென்றால்.

யகு-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

பல்லவி.

தெய்வமெங்கேயிருந்து தேடிக்கொடுக்குஞ்சுவாமி

அநுபல்லவி.

வையகந்தன்னிலவர்செய்யுந்தொழிலைக்கண்டு.........*
தெய்வங்கொடுக்குமல்லால் -பையவிருந்தால்சும்மா-தெய்வ

சரணங்கள்.

குடியானவன்நிலத்தில்... ...படிவிளைவிளைக்காமல்
திடமாய்ப்பலந்தாவென்று ... ...வுடனேதருமா-சும்மா

தெய்வ

நடுவீட்டிவிருப்பது ......நமதென்றிருந்தால்கையி
லிடுவார்கள்வேறுண்டோ ... யென்பிராணேசனேசும்மா

தெய்வ

பள்ளயத்தினிலிட்ட ... ... ...பஞ்சாமிர்தத்தையவ
ரள்ளாதிருந்தால்வய ... ருள்நிறையுமாசும்மா

தெய்

அமுதையடுக்கில்வைத்து-அசனஞ்செய்யாதிருந்தால்
விமலமாயன்னமாகும் ... விதமெப்படிசும்மா

தெய்

கேட்காமலேயிருந்தால் .. கேசவன்முதலோர்கள்
வேட்கையாம்வரமதை......வேண்டிடுவாரோசும்மா

தெய்

அன்னியதாசரணநாஸ்தி ... யென்னதேவரீரைவிட
இன்னமோர்கடவுளுண்டோ- யெங்களைப்போஷிக்கச்சும்மா

தெய்

பங்கஜலோசனலட்சுமி......பதிசமுகத்தையுந்தேடி
எங்களையாட்கொள்ளுய்வகையேதென்றுகேளாமல்சும்மா

தெய்

விருத்தம்.

மனைவியுமுரைக்கக்கேட்டு மனதினில்களிப்பதாகி ... ...*
கனமுடன்முன்னோர்நின்ற கவுரவமதையுமெண்ணி ... *
புநிதனும்வாசுதேவன் பொன்னடிகண்டுமைந்தன் ... ...*
வினையெனுமிடியைப்போக்க விமலருமெண்ணிச்சொல்வார் *

மோகன-தரு-இ-ம்-செண்டா-அடதாளம்.

[கண்ணிகள்.]

ஆதிமூலமாம்பொருளைபாததெரிசனைகாணுவ ...*
தெப்படி-உந்தன்-சொற்படி .... கையி (ன்று
லேதுமில்லாமலேசும்மாய்ப் பேதையைப்போல்வந்தானெ
பேசுவார்-என்னை-ஏசுவார் ... ...*

வறுமையிலழுந்திமெத்தவாதைபடும்நமக்கொன்று*
மில்லையே-செல்வம்-வல்லையே ... இந்தச்
சிறுமையையொழித்துப்போனல் பெருமையாய்வா
வென்றழைப்பார்
பாரிலும்-எந்த-ஊரிலும் ... *

குருவுதெய்வமன்னர்தாசிகோறியதைக்கொண்டுவந்தால்*
வாங்குவார்-நம்மைத்-தாங்குவார் ... இந்தத்
தரணியில்தாரித்ரத்துடனொருபொருளிலாமற்போனல் *
எள்ளுவார்-நெட்டித்-தள்ளுவார் ... ... *

முன்கையாடினவுடன்முழங்கையாடுமென்பதை ..... *
எண்ணுவாய்-உறுதி-பண்ணுவாய் ... பெருங்
கங்கையையுவரியைப்பொங்கச்செய்வதுபனி ... *
யல்லவா-யரிவா-யல்லவா ... ... *

மலைபோன்றதெய்வத்துக்குமலைபோலிடவுநம்மா ... *
லாகுமா-சொல்லப்-போகுமா ... ...வானில்
கலைவளர்மூன்றாம்பிறையைக்கண்டவர்முந்தாணிநூலே *
காரணம்-ஓதும்-ஆரணம் ... ... *

ஆகையாலச்சுதனுக்குஆனதொன்றுங்கொண்டுபோக ...*
இல்லையே-நல்லா- இல்லையே ... அந்த
நாகராசன்புகழும்வைபோகலட்சுமிபதியிடம் ... *
நாடுவேன்-எப்படி-யோடுவேன் ... ...*

விருத்தம்.

பூசுரன்இதுபுகலபுண்யவதிமனதுபூ ... *
ரித்துதானன்னமின்றிப் ... ...*
பேசுசிலநாளிருந்தன்பங்குவிரிகிதனைப் ... *
பிரியமொடுசேர்த்துவைத்து ... ... ...*
மாசிலாளொருநாளிலவலிடித்தன்மகுணன் ... *
மாசுகந்தையில்முடிக்கப் ... *
பாசமுடனேபாதைசென்றுதுன்பப்பட்டு ... *
பகருவான்பலசொற்களை ... ... *

இதுவு-மது.

சுயபுத்தியால்நடப்போர்க்குமேசுகமதாஞ் ... *
சொல்புத்திநாசமாகும் ... *
பயமதாய்க்குருபுத்திகேட்கவும்விசேஷமாம் ...*
பாரில்பாவக்கன்னிகள் ... *
நயவஞ்சனைகள்பிரளயமென்பதைமறந்துவழி ...*
நாடியேவந்துவிட்டேன் ... *
குயவனிடதிகிரிசுழல்போலலையலாச்சுதே ... *
கோபிகாலோலகிருஷ்ணா ... *

௰௭-தரு-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னமெத்தனை தூரமோ-துவாரகாபுரி
யென்னுமூரில்வாழ்ஸ்ரீ அரி

அநுபல்லவி.

பொன்னுலகாளுமந்தப் ... ...புரந்தரன்போற்றிய
பன்னகசயனனே... ... ...பத்மதளாக்ஷனே(இன்)

[சரணங்கள்]

அற்பச்செல்வத்தைவேண்டி ... - அங்கனேசொல்லைநாடி
கற்பகத்தருவைக்கண்டு ... காயைக்கேட்பதுபோலென்
அப்பனேநீயிருக்கு ... ... ... மாதீனமதைத்தேடி
சொற்பப்பொருளைக்கேட்கச் சொன்னாள்சுசேலைசுவாமி
இன்ன

இரவினிலோரிடத்தி ... ... ... லிருந்தெதிராகுமலை
யேறிவழிகள்தப்பி ... ... யிடுக்குகளிலலைந்து
பெரியமுட்காலில்தைத்து ... பிடுங்கக்கூடாமலேயான்
தருவிநிழலைக்கண்டு ... ... தங்கிநடந்துவர
இன்ன

இன்னமெத்தனைகாத......... மிருக்குமோவென்றெண்ணி
பின்னேகழிந்தகாதம் ... பிறகுமனதிலுன்னி
பன்னுமுத்துகளதில் ... பரவுங்கடலைநாடி
பார்த்தசாரதிலட்சுமி ... பதியிருப்பிடந்தேடி
இன்ன

விருத்தம்.

இப்படிக்கரியைத்துதிசெய்துபரவசனாகி ... *
யேகவிருளோங்கிநின்ற ... ...*
ஒப்புமையிலாதகடலெப்படிகடப்பதென் ... *
றெண்ணிமாலுமியைநோக்கிச் ... -...*
செப்புமுபசாரவார்த்தைகளினாலோடத்தில் ... *
சென்றுதுவாரகையைக்கண்ட ... *
விப்பிரனிடபாக்யமதைவிவரிக்கவெந்தனால் -... *
விளம்புமோசொல்வதென்றால் ... *

யஅ - இ-ம்-கல்யாணி-ஆதிதாளம்.

[கண்ணிகள்]

கண்டார்சுவர்னகசிததுவாரகையைக் ...*
கண்களிகூர்ந் ... திடவே- எவர்க்
குண்டாமிந்தவைபோகமென்றுமனங் ... *
கொண்டோடியே ... ...வரவே

காவலாளிகளைக்கண்டாசீர்வாதங் ... *
கருணையுடனே ... ... செய்து-மெத்தப்
பாவனராமுங்களைப்பார்ப்பதுவுமுன் ... *
பலமெனத்துதி ... ...செய்து

மந்தரகுருக்கள்கண்டுமன்துகலங்கியே ... *
மறையவர்வீதி ... ... களில்-அதி
விந்தையாகசாலைகளும்விளங்கும் ... *
விநோதம்யாவும் ... பார்த்து

மந்திரமதில்நவமணிகளழுத்திய ... *
விந்தைகண்களித் ... ... திடவே-சு
கந்தகளபகஸ்தூரிவாடைகள் ... *
கமகமவென ... ... வரவே

கமுகுகரும்புகதலிகுலைதொங்கிய ...*
கனகநகர ... ... மதிலே - சுத்த
விமலமானமுத்தாலேதோரணம் ... *
வீடுவீடு ... ... களிலே

சேடியருடன்வசுதேவசுதன்ஜலக் ... *
கிரீடைகளாடி ... ... யதை - தெரு
வாடைச்சுவர்களதில்வர்னமெழுதிய ... *
வேடிக்கையென் ... சொல்வேன்

சிசுபாலன்கஞ்சன்முதலினோர்தமைஅரி......*
செயித்தசரித்திரம்படத்தி ... ... லெழுதி
நிஜம்ண்டபமதில்நிறுத்தியசித்திர......... ...*
புஜபலமென் ... சொல்வேன்

பேரிமத்தளஞ்சங்கநாதத்தொனிகளண்டம்...*
பிளக்கும்படி ... ... கேட்க-வெகு
சாரியாகமன்னர்கள்வீதியில்வருஞ் ... *
சந்தடிஅதை ... ... ... தாக்க

யானைகுதிரைதேர்பரிவாரங்களை ... ... *
யானுமெண்ணத் ... ... தரமோ-யிந்த
மாநிலமதைவிலையாக்கியபொற்பணி...... ...*
மாதரணியும் ... ... நிறமுஞ்
சுபகரமிகுந்துவாரகைபுரியெங்கினுஞ்... ...*
சுத்திமகிழ்ச்சி ... யாகி - மிகு
கபடருகும்லட்சுமிபதிவாழுங் ... *
கனகதுவாரகை ... ... கண்டு

விருத்தம்,

வாரணமேறியமன்னர்கள்தளமுடன்வந்தவர்காத்திடவே ...*
மாரிபொழிந்திடமண்ணில்விழாமலேமன்னர்நெருங்கிடவே *
வாரிதிபோலவர்வாசற்படிதனில்வந்திதராய்மூல... ... ......*
காரணனுமரிகழல்காணுமலேகாப்பவர்கணக்கிலேயே ... ...*

இதுவு-மது,

அச்சுதானந்தனுஸ்தானத்திலிப்படி ... *
யடங்காதசந்தடியினால் ... ... *
துச்சமிடியந்தணன்போகவழியில்லாமல் ... *
தூறிமெள்ளெனநுழைந்து ... ... *
நச்சணியனேற்றமரிதுவாரபாலகர்தமை ... *
நற்கணூற்கண்டுபோற்றி ... ... *
மிச்சமாகியதனையரிவனாவிடவேறுண்டோ ... ...*
மேதினித்தலமதனிலே ... ... ...*

௰௬-இ-ம்-காம்போதி-அடதாளம்.

[கண்ணிகள்]

திருமண்தரித்தஉங்கட்காசீர்வாதந்..... ...துவாரபாலரோ-கையில்
பெருஞ்சக்ரங்கதைசங்கம்பிடித்துநிற்குந்துவாரபாலரோ
கனகபூஷிணங்கள்கனமதாயணி ... ... துவாரபாலரோ-அநு
தினமும்ஸ்ரீஅரிசந்நிதியைக்காக்குந் ... துவாரபாலரோ

வைகுந்தந்தனைவிட்டுவந்தவரோ ... துவாரபாலரோ-செய
விஜயரென்றுசொல்பவரோநீங்கள்........துவாரபாலரோ

சாமீபசாரூபசாயுச்யமாள்அரிக் ... ... ... காளரோ-இந்த
பாமரன்மேற்கண்பார்க்கவேணுந் ... துவாரபாலரோ

சிறுபோதுயானுங்கிஷ்ணனுங்கூடியே ...துவாரபாலரோ-படிப்
பறவோதினேமெத்தபரிபவமாய்த் ...துவாரபாலரோ

அறிவாரோயிப்போதிவ்வந்தணனைத் ... துவாரபாலரோ-வெகு
வெறியனுகுங்குசேலனென்று... .........துவாரபாலரோ

மீகாமனல்கடல்தாண்டினதுபோல் ...துவாரபாலரோ- அந்த
காகுத்தன்சேவடிகாணச்செய்வீர்... ... துவாரபாலரோ

யான்வந்தவரலாறையாதவனுந்...... ... துவாரபாலரோ- அச்சு
தானந்தன்லட்சுமிபதிக்கருளுந்...... ...துவாரபாலரோ

விருத்தம்.

அவனிசூரரிவ்வண்ணம்பாலகனையேற்றவே ... *
அருகிருந்திடுசெனங்கள்... ... ... *
இவருடையவேஷவிகாரங்கள்காணவே... ... *
யிகழ்ந்ச்சிபரியாசங்களாய்ப் ... ... *
புவியிலிவ்விதமானவையருண்டோவெனப் ... *
புதுமையெனவேநகைத்துத் ... *
தவசியைப்போல்வந்தகாரியமுமாகுமோ ... *
தனையிலிதுநன்றல்லவே ... ... *

உ௰-தரு-இ-ப்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னயோசனைபண்ணினீர்-பிராம்மணரோநீர்
என்னயோசனையெண்ணினீர்

அநுபல்லவி.

கண்ணன்சாம்பிராச்சியலட்சுமி கரனைநீகாண்பதென்றால்
கரிமசகம்போலெங்கட்...... ......கண்களிற்றோன்றுதே
என்ன

[சரணங்கள்]

சின்னவயதில்நீர்செய்தஇஷ்டத்தையவ... .........*
ரின்னமறவாமலேயிருப்பதுவு............முண்டோ
தனையனாவேண்டியே தாரித்ரன்சென்றால் நெட்டித்
தள்ளிவிடுவாரென்ற... ... ...தகமைநீரறியீரோ
என்ன

மண்ணுளுமரசர்கள்மனதைநீரறியீரோ.... ... ...*
மக்கள்சுற்றத்தாரென்று ...மனதிலேயெண்ணுர்கள்
பெண்ணாசைமண்ணாசைப்பொருளாசையாலவர் *
போற்றுங்குருவைக்கொல்லப்போர்செய்வார் நட்பாவாரோ
என்ன

தோலெலும்புகள்தொங்க தொடுக்கவஸ்திரமில்லாமல்
துவண்டுஓடியேவந்தாய் ...... ... தொல்புவியாளிந்த
நாலுபேரில்நீயும்நாணயமாயிருந்தால், ... ...*
நளினமலர்ப்பாதன்... ..... நாடியழைப்பாரும்மை
என்ன

அங்கவங்ககலிங்கஅவநிபதிகள்சூழ்ந் ... *
தெங்குமிடமில்லாமல் ... இருக்கிறாரிதோபாருஞ்
சங்குஞ்சக்கரமேந்திசமுகங்காணமலவர்... ......*
பங்கமானூர்களுமக்கெங்கேநடக்கு ... ... ...மன்பு
என்ன

ஆகையால்வந்தவழிஅதைட்பிடித்தோடியே ... *
ஆசைபெண்சாதிமக்களனைவருட............னிராமல்
பாகுமொழியாள்லட்சுமிபதியருள்பெறவும்மா ...*
லாகுமோகோடியுகமானு ............மிங்குமக்கு
என்ன

விருத்தம்.

பாமரஜெனங்கள்வேதியனையிவ்வழிசொல்ல ... *
பரமபாவனர்களாகிச் ... ... ...*
சாமிசந்நிதிகாக்குந்துவாரபாலகர்கேட்டு ... *
சாந்தகுணரிவர்மனத்தை... ... ... ...*
யாமறியலாகுமோஅறியாமல்சொல்லுவது ... *
அடைவல்லவென்றுதூறி ... ...*
காமவுவரியில்மூழ்குமனிதரோகேளென்று ... *
கழறுவார்சிலவார்த்தையை ... ... ... *

உக-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி

பிராம்மணமமதேவதாவென்றரிசொன்னார்-பிராம்ம

அநுபல்லவி.

பிராம்மணனந்தெய்வமென்று... பன்னுமறையொழித்து
பரியாசஞ்செய்யலாமா...... .........பரமபவுத்ரமுத்து

பிராம்ம

[சரணங்கள்.]

பூமியிலிப்படிக்கொத்தப்-புநிதனைநாம்சேவைசெய்தால்
புண்யராய்ஸ்ரீஅரிபாதம் ... ...பெற்றிருக்கலாம்
பாமரஜெனங்களேநீர்... ...பதறிச்சொல்லுவதினாலே
பாபசாகரத்தில்மூழ்கி - பரதவிக்கஎண்ணுகிறீர்
பிராம்ம

தவமிகுத்திடுமவர்க்குத் ...தவளவஸ்திராபரணங்கள்
தரிப்பதினாலேமெத்த......தண்மையுண்டாவிவித
வறுமையில்துச்சவேஷமே ... ... பெரிதாய்அரி
தவனப்விடவேறேயொன்றைகனவில்நினைப்பாரோயிந்த
பிராம்ம

ஆதியில்அரியுடனே-யோதுநூல்நேசத்தையெண்ணி
ஆசைகொண்டுவந்தவரை ..........ஆதரிக்காமல்

தோதகவார்த்தைகளாடி... துறத்துவதில்பலனென்ன
மாதவலட்சுமிபதியை- மனதில் துதிசெய்யுமிந்தப்
பிராம்ம

உஉ-இ-ம் - முகாரி-ஆதிதாளம்

[கண்ணிகள்]

இப்படிசகலகுணங்களுமுண்டாகிய... ......*
பூசுரர் ... ... ... ...பெருமை
எப்படியளவிடக்கூடுமென்றேஅதைச் ... *
செப்பவும்வெகு ... ... அருமை

அந்தணரோநீரிங்கேயிருமிதோ...... .........*
அதிவேகமா ... ... ... யோடி
நந்தநந்தன்கோவிந்த னுடனேயிதை ... ...*
நாடிச்சொல்வோம் ... ... பாடி

எழுபத்திரெண்டுவாசற்படிகளை...... ... ...*
யேறியேறித் ... ... தாழ்ந்து
பழுதிலாயப்ஸரஸ்ரீகளைப்போல்மிகு.........*
பாங்கியர்கள் ... ... ...சூழ்ந்து

ஆலவட்டம்வெண்சாமரைகவரி...... ... ...*
அனந்தரோத்தி ... ... ... நிற்கு
மாலயத்தில்நின்றறிவித்ததைக்கேட்... ......*
டவரும்வர ... ... வழைக்க

தொகையிலாதவுடுக்களிடைசந்திரன் ...*
தோன்றியபூர ... ... வணையாய்
விகசிதபரிமளம்வீசியமாதரில் ... *
விளங்கும்வைபோக ... னுமாய்

கந்தர்ப்பந்தனையீன்றதயாபரன்... ... ......*
கருமுகில்மேனி... ... ... யனுஞ்

சுந்தரிலட்சுமிபதிநாராயணர் ... *
சேவைகள் ... ... செய்தனரோ

தேவாரம்

ஐயனேபோற்றிமிக்கஅருமறைப்பொருளேபோற்றிக் ......*
கையினிலாழியேந்துங் கடவுளேபோற்றிபோற்றி...... ......*
வையகத்துயிர்களுக்குள் வளருஞ்செஞ்சுடரோயுந்தன்........*
மெய்யடியிணைகள்தந்துவித்தகாவெமையாள்வாயே...... ...*

ஆசிரியவிருத்தம்.

அந்தணர்குலத்திலோனாயருந்தலைவாச............*
லண்டிதன்வரவைதேவற் ... ... *
சுறிக்கையிடவெங்களைஅன்புடன்பிரார்த்தித்த *
ராகையால்சமுகந்தேடி... ... ... *
வந்தோமவர்பேர்குசேலராமுன்னிருவர்... ......*
வாசித்தீர்களாம்பள்ளியில் ... ... *
வசுதேவதனையனீராதிநேசர்களென்று ... ......*
வாஞ்சையுடனேசொல்வதால் ... *
மந்தராவுமதுசித்தமவர்பாக்கியம்... ... *
மனுவெமக்கென்னபுத்தி ... ... *
மாயனேயென்றதைக்கேட்டஸ்ரீமுரஅரி... *
மனதிலானந்தராகி ... ... ... *
யிந்தட்சணத்திலவரிங்கழைத்திடுமென்ன ... ...*
யேகிதலைவாசல்நிற்கும் ... ... *
யெதிரடிபணிந்துநீர்செய்தபாக்கியங்களுக் ...*
கென்சொல்வோம்புண்யநிதியே... .........*

உரு-தரு-இ-ம்-பைரவி-அடதாளம்,

பல்லவி.

வாருமையா வந்தால்கலிதீருமையா குசேலரே-வாரு

அநுபல்லவி.

வாரிதிதாண்டியவந்தணரேசொற்க ... *
வாசன்புகழ்செகதீசனைக்காணவும் - வாரு

[சரணங்கள்.]

நாரணனுமுந்தன்பேரைக்கேட்கமனம் ... ... ...*
நாடிச்சிறுநகையாடிக்கொண் ...... டாடினர்
பூர்வசிநேகஞ்செய்தபூசுரனேவும்மைக்............*
கோரியழைத்துக்கொண்டோடிவரச் ...சொன்னர்
வாரு
செங்கதிர்கண்டசெந்தாமரைப்போலவுந் .........*
திங்களைக்கண்டசகோரங்கள் ... போலவும்
பங்கஜலோசனனாகும்அரிஉம்மைப் ... *
பார்க்கவேணுமென்றபாக்கியமென்ன சொல்வோம்
வாரு
இத்தலத்தில்தங்கும்ராசர்கோட்டைசுத்தி ... *
நத்திநிற்கிறர்கள்நாதனைக் ... காண்பதற்
கெத்தனைபுண்யங்கள்செய்தவரோமிகு ... *
பத்தினியாம்லட்சுமிபதியழைக்கச்... ...சொன்னர்
வாரு

வசனம்

இப்படிதுவாரபாலகர் அழைக்கக்குசேலர் மனங்கொள்ளாத ஆனந்தபரவசராய் அரிசேவகாள்பின்றொடர்ந்துஎதிரில்கண்ட சித்ரவிசித்ரங்களுக்குகளிகூர்ந்து ஸ்ரீமந்நாராயணர்பாதசேவையின்று கிடைத்ததென்று சொல்லுகிறவிதமெப்படி யென்றால்.

உச-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபாக்கியம்பெற்றேன்...... ......*

அநுபல்லவி.

ஸ்ரீஅரிஅரிஅரிஅரிஅரியுமதருள்பெற ... ...(என்ன)

[சரணங்கள்.]

நாடகசாலைகள் ... ... நவரத்நமேடைகள்
வாடைவாடைகளில்...... வேடிக்கைப்பார்க்கநான்
என்ன

பச்சைகள்கோத்துத் ... தொங்கியதோரண
முச்சட்டைகளையிம்முனிவன் ... பார்க்கவும்
என்ன

படிகத்தால்சுவர் ... ... பந்தலைவாசற்
படிகளெழுபதிரண்டையு ... மேறவும்
என்ன

தாளமுறுதங்கவீணைதிக ... ... ளொலியது
ஆழியலைகள்போ ... லடிப்படகேட்கநான்
என்ன

சந்தனங்குங்கும ... ... சவ்வாதுகளா
னந்தமதாயதி ... ... கெந்தம்பெறநான்
என்ன

பதினாறுயிரங்கோப ... ... ... ஸ்ரீகள்
பணிநிதியாம்லட்சுமி ... பதியைப்பார்க்கநான்
என்ன

இப்படிசுவாமியார்சந்நிதியில்போகுமளவில்சொல்வது

ஆசிரியவிருத்தம்.

திடமதாயோரொட்டுமனைவிகளில்காளிந்தி ... ...*
தேவிசாமரம்வீசவே ... ... *
தென்புடன்சாம்பவதிபொன்றுகிலையேந்திடத் *
தேன்மொழிமித்திரவிந்தை ... ... *

மடிபடாவெள்ளிலைமடித்துக்கொடுக்கவு ... *
மங்கைலக்ஷணையென்பவள் ... ... ... *
மரியாதையொடுமெச்சரிக்கைசெய்சுதந்தியு ... *
மதுவயிரிகழல்பிடிக்க.... ... *
மடமயில்சுமித்திரைமவுலிகையேந்தவு ... *
மதனவல்லாசனுகி ... ... *
மாதுருக்குமணிதேவிமார்பில்சிரசதைசாய்த்து *
மாசிலாச்சத்தியபாமை ... ... *
துடைமீதில்கால்நீட்டிதோன்றும்பிரகாசனைத் ... *
துளபவிதழணிநேசனைத் ... *
தொண்டருக்கன்பனைப்புண்டரிகபாதனைக் ... *
கண்டார்குசேலமுனியே ... *

விருத்தம்.

தாரித்ரவாதைபட்டலைகின்றவன்கொக்குத்... ... *
தனங்கண்டசெய்கைபோலும் .... *
நீரிலாவெளியில்விடாயினுல்சோர்ந்துகா ... *
வேரிகண்டவர்போலவும் ... *
பாரில்முள்ளடவிதுழல்தீரருக்கெதிர்பெரிய ... *
தாரிகண்டவர்போலவும் ... ... *
ஆரணன்குலதிலகனுநந்தவாரிதி ... ... *
யழுந்திருரரியைக்கண்டு ... ... *

இதுவு-மது.

தோலெலும்புகளுநேர்ந்துசுந்தரவுருவங்குன்றி ... ... ... *
வாலிபமழிந்துழைப்புவந்துமெய்நடுக்கங்கண்டு............... *
காலுகள்புவியிற்பாவாக்காரணமுந்தான்கண்டு............... *
மாலிரங்கிச்சகிக்காமனத்துடனென்செய்வாரோ ... *

உடு-தரு-இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

இவ்வழிவந்தவரைக்கண்டு... ... எதிர்கொண்டு-இந்த
அண்டசராசரமுண்டவரானவர் ... *

தொண்டனைப்போலவுந் தெண்டன்பண்ணியே *
கவ்வியாலிங்கனந்தந்து ... ... அர்க்கிய
பாதிகளாலந்த வேதியன்பாதத்தை ... *
யாதவவேணுவி நோதன்பூசித்து ... *
அறுசுவையன்னம்பகர்ந்து ... மனமுவந்து-புட்ப
வாசனைகளபம் பூசியபின்றன் ... ... ... *
ஞசனத்திலரி தாசனையிருத்திட ... ... *
அரிவையர்சாமரம்போட... ... வெதிராட-விசு
வாசமுடனேதன் னேசனருகில்ஜெக ... ...*
தீசனிருந்துஅந்த பூசுரன்கழல்களை... ... *
பிடித்துக்கொண்டிருக்கவுந்துறந்தார் மெய்மறந்தார்-லட்சுமி
பதிபணிவிடைசத கதிபெறவிதுவே ... ...*
ததியெனமனதினில் துதிபுரிந்தேயவர் ... *

ஆசிரியவிருத்தம்.

நாராயணன்சேவைகண்டுகண்களிகூர்ந்து ... *
நன்முகமலர்ந்தேத்திடு ... ...*
நான்முகன்றந்தையணிநற்றுளவகந்தமதை... *
நாசியாக்கிராணிக்கவும் ... ...*
மாராபிராமனன்மதுரமொழிசெவியேகி ... *
மனமகிழ்ந்துள்ளமுருகி ... ...*
மாதவன்கரங்கடன்மீதிருப்பதினாலும் ... *
வாஞ்சையொடுமெய்ம்மறந்து ... *
சீராகவாரியிடுமமிர்தவன்னச்சுவைகள் ... *
சிங்குவைநினைத்திருக்கச் ... *
சேஷசயனன்மீதுபஞ்சேந்திரியங்களைச் ... *
சேர்க்கும்விதமென்சொல்லுவோம் ... ...*
வாரிவீழாவிபோலுப்பினீர்போலவும் ... ... *
வன்மைகற்பூரமதனில் ... ...*
வன்னிபோல்வைகுந்தனுடனேகலந்துவிம் ...*
மதிமறந்தான்பூசுரன் ... ... *

விருத்தம்.

வரதனுடனேயெதிர்வார்த்தையொன்றருளாமல்... *
வாசுதேவனையேத்தியே ... ... *
பெரிதாயிருக்குமவ்வேதியன்வந்தவிதம் ... *
பெருமானுமனதறிந்து ... ...*
சரியாகமுன்னிருவர்கூடிவாசித்தவகை ... ... *
சர்வமுநினைந்தொன்றுமே ... ... *
தெரியாதுபோலவவ்வந்தணர்முன்செப்பத்... ...*
தொடங்கினர்சர்வேஸ்வரர் ... ...*

உகூ-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

என்னபாக்கியம்பெற்றோம்-யானுமென்குடிசையு
மெதியே பிராமண பதியே

அநுபல்லவி.

நின்னிடசேவைக்கெதிர்......பார்த்துப்பார்த்துமன
முருகியுருகியுலைமெழுகெனப்பூசுரர்கருணையுடனேயென்னருகி
என்ன [னில்நீர்வா

[சரணங்கள்]

கடல்தாண்டிவருவோரைக்கண்டுநின்க்ஷேமமகங் *
களிக்கவேகேட் ... ... டிருப்பேன்
கடுவழிதூரதேசங்கானகம்நீரிருக்க ... ... *
காணக்கிடைக்காமலேகார்ப்பேனுனெருப்...மிக்க
அடவிநெல்லிக்கனியும்அம்புநிலவணமும் ... *
அடுத்ததாகவெனமையடுத்தீரோ ... அப்போ
படித்தநேசந்தேடிப் ... ... ... *
பிடித்தீரோயிப்போ ... (என்ன)

பரிணயஞ்செய்துக்கொண்டுபாலரைப்பெற்றீரா *
பார்ப்பவர்கண் ... ... களிக்க
அருமையில்லாமலநுதினமன்னம்நடக்குதா ... ...*
அமர்ந்தபத்தினியுமக்கானதா ... யிருக்குதா

பெருமையுடன்புருஷீ ... ... ...*
பத்திமிகவுங் ... ... ...கொண்டு
பேராகவேநின்பணிவிடைசெய்ய ... *
சீராகவேமனமிசைவளோ ... ஐயா(என்ன)

காலந்தப்பாமல்ஸ்தானபானங்கள்நடக்கவுங் ......*
கட்டையில்திட ... ... முண்டா
வாலைப்பருவமுதல்வருமாண்டெத்தனை... ... *
வதிதைப்புதல்வரையெவ்வழியில்போ ஷிக்கிறீர்
மாலடியவருக்குமன்னமிடுகிறீரா ... *
மறையவர்குலபூஷிணமே ... ... யெமக்கிது
தெரியவேணுமென் ... ... ... *
மனமிகக்களிக்குது ... ... (என்ன)

சின்னவயதில்சாந்தீபனிடத்தில்கற்ற ... ... *
சிட்சையைநினைப் ... ... ...பீரா
அன்னவர்பாரிநம்மைஅரண்யத்துக்கனுப்பவும் *
ஆசையுடனேபாடியாடிகடறுக் ... ...கேகி
பன்னும்விறகொடித்துப்பங்குக்குவந்தசுமைப்...*
பற்றித்தூக்கியொருநொடி... ... யிலையா
கத்தினில்போட்டது ... ... ... *
சித்தமறியுமா ... ... (என்ன)

மறுபடியொருதினம்விறகொடிக்கச்சென்று... ...*
மாறகத்தப்பிப் ... ... தப்பி
இரவானதுமன்றியிடிகள்மழைகள்பெய்ய.........*
ஈரத்துடனேவழிதெரியாமல்... ... விழிக்கவும்
குருவுநம்மைக்கிட்டிக்கொண்டுபோனரோ........*
அந்தக்குறியறி ... ... ... வீரா
ஸ்ரீலட்சுமிபதிதிருவடிநம்பிய ... ... *
திவ்வியகுணம்பதி ... ... ...(என்ன)

உ௪-தரு-இ-ம்-மங்களகௌசிகம்-மட்டியதாளம்.

[கண்ணிகள்.]

உலகவாழ்க்கையாகசுவாமி ... யொன்றுமறியாளைப்போல
பலபலவிதமாயவனாப்........... ... பார்த்துக்கேட்டபின்

உயர்குலத்துதித்தவரசே... ... ... உறவின்முறையாவதற்கு
நியமமடையாளமொன்......... ...... ...திருக்கவேண்டுமே

இத்தனைநாளைக்குப்பிறகெந்த... ........ னருகில்பந்துவாக
வுத்தமநேசத்தைத்தேடி...... ....... ... ... வந்தீராகையால்

என்னகொண்டுவந்தீர்நட்ப ... னுண்ணுதற்குவஸ்துவென்று
சின்னல்பின்னல்சீலைசுத்துஞ் ... ........ சிறுத்தமடியினில்

கையைவைத்துதடவிப்பக்கங் ... கந்தையில்முடித்தவவலை
மெய்யனுந்தொட்டவிழ்த்து ... ... மெத்தமோகமாகியே

அவையில்கொஞ்சமள்ளிஜய ... ... னருந்திபார்த்தபின்னதிக
சுவையுடனேயிருப்பதென்று... ... ... ...சொல்லிப்பின்னையுங்

கரத்தைவைத்தெடுத்துலட்சுமி - பதியும்வாயில்வைக்கும்போது
அருகில்நிற்கும்ருக்மணி ... ......... கையண்டிதொட்டனள்

என்றுசுகயோகிசொல்ல...... ... இந்திரசுதன்பேரன்கேட்டு
புண்டரீகமலர்பதத்தைப்போற்றச்...... ... ...சொல்லுவான்

விருத்தம்

மனைவியானவள்வினையில்மந்திரியைப்போலவும் *
வலசையிடுதருணத்திலே ... ... *
வினயமுடனன்னைபோலாகவும்விரகத்தில் ...*
வேசியைப்போல்செய்வதே ... ... ... *
கனமென்றுபெரியோர்கள்சொல்லுவாரதைவிட்டு *
கமலையென்கைப்பிடித்த ... ... *
தினதென்றுசொல்லுவீரடியனுக்கென்முனிவ ...*
ரிதைவிரித்துச்சொல்வரோ ... ... ... *

உஅ-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பல்லவி.

பாலனுகேளாய்-பரிச்சித்துபூ-பாலனுகேளாய்

அநுபல்லவி.

நீலமேனியன்போடுமுடியிந்த.......... .........*
ஞாலமதிலெவராலேஅவிழ்க்கலாம்.........(பால)

[சரணங்கள்.]

ஆதிவைகுந்தத்திலரியுடனுடும் ... லட்சுமியாகுட்ருக்மணி
மாதுசத்தியந்தருமந்தப்பி மாயனைவஞ்சிப்பதுண்டோ
பால

பிடியவலுட்கொண்டுமெத்த... ...பேதையாகும்முனிவனுக்கு
முடிவிலாயிருநான்குபோகம் முரஅரிதரவெண்ணங்கொண்டா
பால [ர்

பின்னையும்பிடிய்வல்புசித்தால்... ......பிராமணன்றனக்குமிவர்
என்றுமூழியஞ்செய்யவேண்டுவதென்று ... ... கண்ணன்கை
பால [பிடித்தான்

ஆகையினுலேதடுத்தாளப்மைலட்சுமிபதிதன்னை... ...அண்டின்
அவையோர்முதலானதோ ... ... ...ரிதையறியார்

பால

விருத்தம்.

இந்தவிதமென்றுசுகர்சொல்லிபின்சொல்லுவர் *
யாதவோத்தமனுகிய ... ... ... *
நந்தநந்தனனவலைபுசியாமல்முடியிட்டு ... *
நற்சொற்களாற்றேற்றியே ... ... *
அந்தனுபோய்வாருமென்னபதிலாடாம ... *
லானந்தமுடனேகவே ... ... ...*
மந்திரமதித்தங்குஞ்சுந்தரிகள்கண்டுமனம் ...*
வாடியேசொல்லுகின்றார் ... ... *

உகூ-தரு-இ-ம்-ஆநந்தபைரவி-அடதாளம்.

பல்லவி.

என்னகன் னெஞ்சமம்மாகொடுப்பதற்... ...*
கென்னத்தில்பஞ்சமம்மா ... ... *

அநுபல்லவி.

தன்னுடன்வாசித்ததனதிருமேலகடல் ... *
தாண்டிநொந்துமிகவேண்டிவந்துமிடர் ... *
தடுக்காதெது கொடுக்காமலே துடுக்காயவல் முடுக்காய்புசித்
தென்ன

[சரணங்கள்.]

அன்னத்துக்கில்லாமல்கோறிவந்த ... *
அந்தணரைப்பணிந்து ... ...*
தன்னிடசிங்காசனத்திற்...... ... பூசித்தவர்க்
கென்னகொடுப்பாரோவென்று ...மகிழ்ந்தோமே
தகுமோஇது வகைமோசமென்.........*
றகமேசெலமிகசெய்வதற்...... ... ...*
கென்

ஆடவர்பெருமையாய்வந்தாலவரை ... *
அண்டுவாரென்றசொன்மெய்யே ......*
வேடம்பழுதானல் ... ...வேந்தர்முன்னேற்குமோ
வெற்றிபெற்றவர்கள்பக்தி ... ......செய்வார்களோ
வெகுநாள்மலை மிகத்தோண்டெலி ...*
வகையேவிட சுகமேயிலை...............*
என்

கிராமம்புதியதென்றேயிரந்தவர்க்......*
கறமுங்கூடப்புதிதாச்சே... ... ... ...*
பூமகள்லட்சுமிபதி ... ... செயலையெண்ண
பொன்னுலகோர்க்குந் ... தரமோ துதிபண்ண
போதவேபடித் தோதும்வேதியற்......*
காதியானவ ரேதுசெய்தனர்... ... ...*
என்ன

விருத்தம்.

கோபிகாஸ்ரீகள்பதினாயிரம்பேருங்கூடிபேசவுமந்தணர்... ...*
ஸ்ரீபதித்தியானசேவா துரந்தரனாகுசேலராசிசென்றாராக ... ...*
பூபாலர்தங்கும்புரங்கள்நதிகள்மலைகள புதிதனுந்தாண்டிவரவே
பாபசாகரமானதாரித்திரநீங்கிடப்பிராமணன்பார்த்துவிட்டார்.

ரூய-தரு-இ-ம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

பரமபாகவதராங்குசேலர்- பாக்கியமேபாக்கியம்

அநுபல்லவி.

மரணஜெநநவேதனை ... நீக்கிய... ... ...*
மாதவன்மலர்திருவடிகளைநோக்கிய ..(பரம)

[சரணங்கள்.]

திறமுடனுபவாசங்களாற்சிக்கிய ... .......*
திரோகரத்த ... மாம்சங்களுமாச்சு
கருமைபொருந்திய்கந்தைகளுந்திவ்ய ...*
கசிதபட்டுபீ ... ... தாம்பரமாச்சு

பரம

மாபிலணிதுளவமணிகளுமுத்து ... *
மாலைகளாய்த்துலங்காடவு ... மாச்சு
கூர்மைதெர்ப்பைபுல்பவுத்ரமதுவிரல்... *
காண்டரத்நக்கன்மோதிர ... மாச்சு

பரம

காதில்தரித்தசெந்தாமரைமணிரவி ... ...*
காந்திகவசகுண்டலங்களு ... மாச்சு
ஆதவன்முன்பனிஅகலுமதுபோலிந்த ...*
வேதியனைத்தொடர்வினைகளும்... ...போச்சு

பரம

அந்தரதுந்துமியுடன்றேவர்களவ... ......*
ரந்திரநின்றுமலர்மாரிகள்... ... ......பெய்ய
முந்தியபிரகலாதாழ்வாராதிகள்... ... ...*
முனிவன்செயலையேற்றித்துதி... ......செய்ய

பரம

ராஜராஜரொதிர்வந்துபணிந்தவ ... *
ரதகெஜங்கள்மேலேற்றி ... நடத்திட
தேஜமாலட்சுமிபதிகிருபைபெறுசத—...*
பூசிதந்தருந்தனபதிக்கு... ... ...வந்திட

பரம

விருத்தம்.

ஆதிதனிலிவ்வையர்வாழ்ந்திடுஞ்சிறுகுடிசை ......*
அஷ்டஅயிஸ்வரியமோங்கி ... ... *
மாதவன்றங்கும்வைகுந்தமளகாபுரி ... *
வானோர்பதிக்குநிகராய் ... ... *
வேதகோஷ்டத்தொடுவிளங்கவேதியன்கண்டு......*
வேடிக்கையுடன்மகிழ்ந்து ... ... ... *
சிதரன்கிருபையாலாச்சுதென்றெண்ணியச்... ...*
சிங்காரபுரிநுழைந்தார் ... ... ... *

நுக-திபதை-இ-ம்-மத்தியமாவதி.

சிரியவசோதையின்சேயனால்வந்த .........*
பாரியசெல்வமென்றேயன்னி ... ... எண்ணி
பாங்கியரோடேகி பதிதனைக்கண்டு... ......*
ஓங்கியவாசையால் .............உள்ளமகிழ்ந்து
துதிபுரிந்தெதிர்கொண்டு' தூப்பிதழ்வல்லி ...*
மதியினைக்கண்டநல்... வாரிபோலமகிழ்ந்து

நவமணிகளால்திஷ்டி நாதனைச்சுற்றி... .......*
புவியிலெறிந்திட்டு ... ...புஷ்பாக்ஷதைகளால்
பதினாறுவிதமாக பதபூசைசெய்து............*
இதவாகஅறுசுவையு...... மிஷ்ட்டான்னமிட்டு

களபகஸ்தூரிசேர் கந்தனனங்கள்... ... ...*
வளமாகமெய்யினில்... ... ... மனையாட்டிபூசி
வெள்ளிலைசுருள்தர வேதியனருந்தி... .......*
உள்ளமுருகினரதை.........யுவலவொண்ணாது

ஆவாரைபூர்த்தவவ் வாறுபொற்பணிகள் ...*
ஆவலாயணியுமவ்... ... ...வரிவையர்சூழ்ந்து
வெண்சாமரைகவரி வெண்பட்டுகுடைகள்...*
கண்காட்சியாகவே............கன்னியர்பிடிக்க

பதினெட்டுவாத்தியப்பறைகளடிக்க...... ...*
மதனுபிஷேகசாம்... ... ...பிராச்சியனுயந்த
சப்பிரமஞ்சத்தினில் சதுராய்படுக்க.........*
ஒப்பிலாமனைவியு... ......முவந்துதாட்பிடிக்க

உல்லாசமாயவ ருதித்திருந்தரசே...... ......*
எல்லாமுயற்சியு... ......மெந்தனுல்சொல்ல
முடியுமோசேடனுல்முடியவுந்தரமோ ......*
அடியனுலறைவதற்...... ...கந்தணர்பெருமை

இவ்விதச்செல்வத்தியற்கையுங்கண்டு ... ...*
நவ்வியான்போனதும்... ... ...நரஅரிதந்த
மோசமாஞ்செல்வப்பசாசையான்வேண்டேன்
பாசமல்லாவிதிற்............பயனில்லையென்று

வெறிபிடித்ததுபோல் வேதியனெழுந்து ...*
நெறியுடனேகாந்த......... நிலையினிற்சேர்ந்து
பரிதாபனுய்லட்சுமி பதிதனைநாடி............*
விரைவாகவேதியன் ......விளம்பலுற்றனனே

௬௨-தரு-இ-ம்-நீலாம்புரி-ஜம்பைதாளம்.

பல்லவி.

அரிஅரிஅரியேஅரியேஇதுவென்னவாச்சரியம்
அடியேனறியாமலளித்தாயே... ஐஸ்வரியம்(அரி)

அநுபல்லவி.

பெரிதானநின்பாத... ......பங்கஜத்தைப்பெறவந்த
பேதைக்குச்செல்வப் ... ... ...பிசாசைமிகவுந்தந்த

அரி

[சரணங்கள்.]

மாயமாஞ்சாம்பிராச்சிய ... மதமேறிநின்னை
மறக்கவோசெய்தாயிந்த ... மாநிலத்திலென்னை
சாயுச்சியபதவியளித்தாளுந் ... ......திருவடிதன்னை
தவம்புரியுமடியனுக்குத் ... ...தாராமலேயின்னை

அரி

தினைகொறித்துழலுருபொழுதை தெறிக்கவிட்டதுபோல்
தீயார்கொள்பொருளளித்து ......சிந்தைகலைப்பதினால்
ஜனித்தநாள்முதல்வறுமை - சதமென்னுமெனக்கினிமேல்
சம்பத்துவேண்டாமுந்தன்......சரணமேநம்புவதால்

அரி

கனியைவிட்டுக்காயைத்தின்ற ... ......கதைபோலஞான
இனிமையினுலிகமொழித்து ... ... ஏகபரனுன
புநிதனுவகேகுதற்குப்............ புவிமீதிலாசையென்ன
பொன்னுலகரம்பைகண்டபுருடருக்கேனிகழ்த்துமின்னாள்

அரி

அலறியழும்புதல்வனை ... தாயாதரிக்கும்போலே
ஆசையுடன்பாவச்செல்வ...........மளித்தீரும்மாலே
உலகில்பெரியோர்கள்துற......வறமாள்வோரதுபோலே
உபயபதமலர்களெனக் ..... குதவும்லட்சுமிபதிமாலே

அரி

எண்சீரடியாசிரியவிருத்தம்.

இப்படியேமறைமுனிவனிகழ்ச்சிசொல்ல ..... ..*
ஈதறிந்துதுழாய்முடியோனிதுவென்னென்று *
அற்புதமாய்கரத்தையாயுதங்களோடு ... ... *
அவர்மனைவியெண்மருடனுதிமூர்த்தி... .........*
செப்பரியகட்செவிகளரிமீதேறிச் ... ... ...*
சிறப்புடனத்துவாரைவிட்டுஸ்ரீநிவாசன் ... ...*
கொப்பெனவேதன்னடியனுங்குசேலர் ... ... ...*
கோக்களிக்கவந்துநின்றார்கூவாழ்வோனே ...*

௬௬-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பல்லவி.

வந்தார்துவாரகாவாசர்-குசேலர்செய்த
முந்தூழைநீக்கு மீசர்

அநுபல்லவி.

நந்தேந்துங்கரத்தோடும் ... நற்பொன்னின்கலையோடும்
இந்திராதியர்கள்போற்ற......... எங்கும்புகழைச்சாற்ற

வந்தார்

[சரணங்கள்.]

காலில்வெண்டய.....மொலிக்க-அரையிலிடுங்
கச்சைப்பிரகாசஞ்... சொலிக்க
நீலமுகிலைப்போலநினைக்குமுன்னமே... ...வந்தார்
ஆலவிழியார்மிண்டன் ...அவர்கைமொத்துண்டவர்

வந்தார்

தோளிலாஞ்சன மின்ன-தோகையின்மயிர்
சொல்லுமுதுகில் துன்ன
தாளுமடியருக்கு...... ...... .. நாலாமுத்தியளித்த
தாளன்குசேலருக்குத் ...... தாள்தூளளிப்பதற்கு

வந்தார்

கையிற்கடக......மின்ன-கதிரைப்போலே
காதிற்குண்டலந் துன்ன
மெய்யிற்பணிகளெல்லா-மென்மேலுமொளிசெய்ய
ஐயன்லட்சுமிபதி......... ... .........ஆயர்குலநிதி
வந்தார்

எண்சீரடியாசிரியவிருத்தம்.

வந்தெதிரில்நின்றஅரிவனசத்தாளே ... *
வலமாகவந்துஜந்தும்புவியிற்றுக்கத் ... *
தெண்டனிட்டுமிகவேற்றித்தீமையான ... ... *
செல்வமெனக்கேனளித்தீர்நரகமென்னுஞ் ...*
சிந்துவினிற்றளநினைத்தீர்தேவேயிந்தச் ... ... *
செல்வமெனக்கேனரியேசிதைந்துபோகப் ...*
பண்ணுமென்றுசேலமுனிபகரக்கேட்டு ... *
பதிலுரைப்பார்கேளுமென்று பணிமேலோனே.

ஙச-இ-ம்-பூபாளம்-அடதாளம்.

[கண்ணிகள்.]

மறையவர்குலத்துக்குமாணிக்கரத்தின ....*
மாகவந்தகுண ... ... பூஷிணு
சிறுமைப்பட்டாயென்று செல்வந்தந்ததற்குச்
சிந்திப்பதேனமிர்த ... பாஷிணு-சேல

செல்வமில்லாதவர்பிணமென்றுசொல்வதை *
செவியினிற்கேட்டறி ... கிலையோ
நல்வசனஞ்சொன்னுய்நானெங்குங்கேட்கிலை *
நான்மறையிற்பார்த் ... திலையோ-சேல

சரியின்வாலைப்பற்றிக்கனமானகெங்கையைக் *
கடப்பார்களதை ... ... விட்டு

தரியின்வாலைப்பற்றிநதிதாண்டுவருண்டோ *
நானிலமுள்ளோர்மே ... விட்டு-சேல

கனியையன்றியெட்டிக்காயைப்புசிப்பாரோ.*
கல்விபடித்த ... ... வர்கள்
சனியெனுமிடிபோக்கிச்சம்பத்துதந்தத்தைச்*
சகிக்காமல்தள்வரோ...... ... பெரியோர்கள்-சேல

தருமமாகுதென்றுதரவந்தவிரிகியைத் ... ...*
தள்ளிநாழிபிச்சையென்பர் ... ... போல்
பெரியவரோயிந்தப்பேதையறிவுந்தன் ... *
பெருமைக்குத்தாழ்ச்சியா ...மாதலால்-சேல

பாத்திரமறிந்திட்டபாகவதரோநீர் ... *
பகர்ந்தவவல்பலந் ... ... தந்தேன்
தோத்திரஞ்செய்யுந்தன்வநிதையும்புதல்வர்கள்
துடிப்புத்தீரயா ... னுகந்தேன்-சேல

ஆகையாலிதைவைத்துஆண்டுக்கொண்டிருங்கள்
ஐயாசிலநாளைக்குப் ... ... பின்
தோகையுடனும்மைத்திருவடிசேர்க்கிறேன் *
தொண்டாயிதற்குச்சிந் ... திப்பதேன்-சேல

புலையனுனுஞ்செல்வன்புவியில்மேன்மையடைவான்
புகலநீகேட்டறி ... ... கிலையோ
தலையிலெழுத்துன்னை தள்ளச்சொல்வதையோ
தனையன்லட்சுமிபதி ... நிலையோ-சேல

எண்சீரடியாசிரியவிருத்தம்.

மாதவனிப்படியுரைக்கமறுத்தான்சேலன்...... ...*
மனமகிழ்ந்துஅரியுரைப்பார்மக்களுக்கும் *
கோதறுசீருன்னிலைக்குங்கொடுத்தேனிந்தக் ... ...*
குறைவுபடாச்செல்வமென்றுகூறிவாழ்நாள் *

மாதவனைகழித்தபின்புநம்மையேத்தின்... ......*
வைகுந்தந்தனிலழைத்துவைப்பேனென்று *
யாதவனுங்கடவுடமதுலகஞ்சார்ந்தார்......... ...*
ஐயிருந்தான்பின்னப்பதிசேர்ந்தாரோ... ...*

கந்தபத்தியம்.

கேளாய்ப்பரிச்சித்தரசனே ... ... ...*
நாளுமிதையோதுவனாநாடியவினைகள்*
மீளும்நரஅரிதுதியது.................*
வாளாயுதமாகுமந்தவந்தகனுக்கே ...*

வாழிவிருத்தம்.

அருமறைக்குசேலன்வாழியந்தணரெல்லாம்வாழி..... *
பெருமனப்பெரியோர்வாழி பீடுகற்புளரும்வாழி.......*
அரியருள்பெற்றஆழ்வா ரனைவரும்வாழியிந்த .. ... ...*
உரியநூற்கேட்டபேர்களூழியுள்வாழியாதோ...... ...*

## குசேலமகாமுனிவர்

சரித்திரக்கீர்த்தனை

முற்றுப்பெற்றது.